PUBLIC LIBRARY
JAFFNA

## காங்கேசன்துறை சிமெந்துதொழிற்சாலை 3ம் கட்டப்பகுதியில் தீ விபத்து!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் இரவு மர்மமான முறையில் தீவிபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இரவு சுமார் 2 மணியளவில் ஏற்பட்ட இத்தீவிபத்துதற் செயலாக ஏற்பட்டதா அன்றிச் சதி முயற்சியா என்பது பற்றித் தீர்மானிக் கமுடியாத நிலையில் அதிகாரிகளும், பொலிஸாரும் இருக்கின்றனர்.

தொழிற்சாலையின் 3ம் கட்டப் பகுதியில் பொறியியல் பிரிவில் உதிரிப்பாகக் களஞ்சியத்தில் இத்திவிபத்து ஏற்பட்டுள்ளது.

சீமெந்துத் தொழிற்சாலையின் பாதுகாப்பு அதிகாரிதிரு. ஆரியசேன இச்சம்பவம் பற்றிக் காங்கேசனதுறைப் பொலிஸில் புகார் செய்துள்ளார். பொலிஸார்ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்கள். தீவிபத்தக்கான காரணம் பற்றித்தீர்மானிக்க, கொழும்பிலிருந்து இரசாயன ஆய்வாளர்அழைக்கப்படலாமென்றுதெரிகிறது.

விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் ' ' தை 16 றவி ஆகிர் 3 இதழ் 347
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 29 82

Ask your
Newsagent
for 's
SATURDAY REVIEW

★பொலிஸார் கைதுசெய்யச்சென்றபோது துப்பாக்கியுடன் இருந்தனராம்!

# 3 இளைஞர் இளவாலையில் கைது

# துப்பாக்கிகள் தஸ்தாவேஜுகள் கைப்பற்றப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

தடைசெய்யப்பட்ட இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் மூன்று இளைஞர்களை இளவாலையிலுள்ள வீடொன்றில் வைத்து பொலிசார் கைதுசெய்துள்ளனர். இவர்கள் மூவரிடமிருந்து தன்னியக்கத் துப்பாக்கி, சாதாரண துப்பாக்கி, சுழல் துப்பாக்கி ஆகியவற்றைக் கைப்பற்றியதுடன், இவர்கள் தங்கியிருந்த அறையிலிருந்து தமிழ் தட்டச்சு இயந்திரம், கொள்ளையடிக்கப்பட்டதாகக் கருதப்படும் தங்கப்பதக்கம் மற்றும் பல தஸ்தாவேஜுகளையும் கண்டெடுத்தனர்.

புத்தூர் நவக்கிரியில் அண்மையில் நடைபெற்ற கொள்ளை சம்பந்தமாக இரகசியத் தகவல் ஒன்றின்பேரில் நேற்றுமுன் தினமிரவு விசாரணைசெய்யச் சென்ற பொலிசாரே இவர்களைக் கைதுசெய்ததாகக் கூறப்படுகிறது.

### ஆனைக்கோட்டை பொலிஸ் நிலைய துப்பாக்கிகள்

இவர்களடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள் இரண்டு ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்டதாம்.

### நாச்சிமார் கோவிலடி துப்பாக்கிச் சம்பவம்

கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் றிவோல்வர்; 31—5—1981ல் நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் பிரசாரக்கூட்டத்தின்போது சுட்டுக் கொல்லப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் புஞ்சிபண்டாவிடமிரு

(8ம் பக்கம் பார்க்க)

# வடலியடைப்புக்கிராமத்தில்

## இராணுவம் - பொலிஸ் முற்றுகை! தற்காலிக முகாமும் அமைக்கப்பட்டது; தேநீர்க் கடை உரிமையாளர் கைது!

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்புக் கிராமம் நேற்று பொலிஸ்—ராணுவ முற்றுகைக் குட்பட்டிருந்தது.

பயங்கரவாதச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களைத் தேடும் முகமாகவே இந்த முற்றுகை நடைபெற்றதாகத் தெரிகின்றது.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்குமுன்பாக தற்காலிக முகாம் ஒன்று அமைக்கப்பட்டு டிரக்குகளும, ஜீப்புகளும் நிறுத்தப்பட்டிருந்தன. ஆயுதங்களுடன் பொலிஸ்—ராணுவ வீரர்களும் நூற்றுக்கணக்கில் காணப்பட்டனர். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அரை நேரத்துடன் மூடப்பட்டது.

கிராம மக்களில் பலர் இம்முகாமுக்குக் கொண்டுவரப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். ஆயுதம் தரித்த வீரர்கள், சந்திகள், ஒழுங்கைகளில்நிறுத்தப்பட்டிருந்தனர். வீடுவீடபகச் சோதனை நடத்தப்பட்டது.

இதேசமயம் ஹெலிகொப்டர் ஒன்றும் தாழப் பறந்து அடிக்கடி கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது.

### ஒருவர் கைது

(பிந்திய செய்தி)

பண்டத்தரிப்புக்கு அருகில் உள்ள வடலியடைப்புக் கிராமத்தில், தேநீர்க்கடை உரிமை

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு உப்புக்கு அதிக கிராக்கி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு உப்புக் களஞ்சியத்திலிருந்து வெளிநாட்டிற்கு உப்பை ஏற்றுமதி செய்ததன் மூலம் உப்புக்கூட்டுத்தாபனம் வெளிநாட்டுச் செலாவணியாக சுமார் ஏழு லட்சம் ரூபாவை சம்பாதித்துக் கொண்டது.

இலங்கை உப்பிற்கு வெளி நாடுகளில் பெருமளவு கிராக்கி ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து இவ்வருடத்தில் பெருமளவு அந்நியச் செலாவணியை உப்புக்கூட்டுத்தாபனம் பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எம். வி. ''பெயர் மறின்' என்ற சிங்கப்பூர் கப்பல் இம் மாதம் பதின்மூன்றும் திகதி யாழ்ப்பாணத் துறைமுகத்திற்கு உப்ப ஏற்றுமதிக்கு வந்தடைந்தது. இக்கப்பலில் ஒரு அந்தர் எடை கொண்ட ஒரு லட்சத்து அறுபத்தி நான்காயிரம் மூடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் ஏற்றுமதி வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அத்துடன் எண்பது மோட்டார் லொறிகளும் முப்பது வத்தைகளும் பத்து இயந்திர வள்ளங்களும் சேவையில் ஈடுபடுத்தம்பட்டன.

(6-ம் பக்கம் பார்க்க

யாழ். நகரில் இன்று

புதிய கடை

## திறப்பு விழா

29-1-1982



உங்களுக்குத்
தேவையான
பலசரக்கு
மற்றும்
சாய்ப்பு
சாமான்களை
சிரமமின்றி
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
கொள்வனவு
செய்வதற்கு
இதோ ஓர்
புதிய
ஸ்தாபனம்



குகன் ஸ்ரோர்ஸ்!

மேற்படி ஸ்தாபனத்தின் திறப்பு விழா 29—1—82 வெள்ளிக்கிழமை காலை 6—36 மணிமுதல் 8—06மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறும் என்பதை அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகிறோம். தங்கள் நல்நல்வரவையும் நல்லாசிகளையும் நாடும்

உரிமையாளர்கள்

## குகன் ஸ்ரோர்ஸ்,

[சுபாஸ் கபேக்கு அருகாமையில்]
180 (380), ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்
தொலைபேசி: 553
[2107]

### மணிவாக்கு

நத்தம் போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கல்லால் அரிது. — குறள்

# நமது நோக்கு

## கல்லூரி அதிபர்கள்

மூந்த நாள்நாமெழுதிய தலையங்கத்தில் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்கள் பற்றி அதிகம் உயர்த்தி எழுதத் தவறிவிட்டோ மென்று கவலைப்படக்காரணம் உண்டு.

இன்று கிடைத்திருக்கும் செய்தியில் கல்லூரி அதிபர்கள் தெரிவில் நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற அரசாங்க சேவையாளர்களை அழைப்பதென கல்விஅமைச்சு முடிவு செய்துள்ளது. விடயம் துரிதப்படுத்தவேண்டியதால் 'முதலுதவிக்கும்' அவர்களில் சாரண பயிற்சி பெற்றவர்களை அழைக்கலாம்.

இத்தகைய பொறுப்பான பணிக்கு 'பென்ஷன்' எடுத்தவர்களை கூப்பிடுவதானல் அவர்களின் திறமையும் பெருமையும் என்னே!

நிச்சயமாக இவர்களிற் சிலர் 1978 முன் இளைப்பாறியவர்களாக விருப்பார்களென்று எதிர்பார்க்கலாம். அரசு வேண்டுமென்று தவிர்த்தாலொழிய நான்கு வருடங்களுக்கு முன் இளைப்பாறிய உயர் நிர்வாகிகள் பலர் தகுதியில் சிறந்தவர்களானல் அவர்கள் இப்பொறுப்பான பணியில் அரசுக்கு உதவலாம்.

இது கைகூடுமாயில் இவர்களுக்கு இருந்துவரும் 'பென்ஷன் பாகுபாடு' என்ற நான்கு வருட நோய்க்கு நிவாரணம் கிடைக்குமென எதிர்பார்க்கலாம்.

'அரிசிப் பொரியோடு திருவாரூரும்' என்றது போல் நாம் கவனத்துக்கெடுத்துக் கொண்டது 'கல்லூரிஅதிபர்கள்' பதவிபற்றி.

'சிறுகக்கட்டி பெருக வாழ்க' என்ற மங்கலமான வாழ்த்துக்குமாருக 'பாடசாலை தலைமைஆசிரியர்கள்' என்று சொல்லி குறிப்பிட்ட காலத்தில் பதவிகளை வகித்து அவற்றிற்குரிய மதிப்பான வேதனத்தை அதற்குரிய நேரத்தில் பெருமல் 'கல்லூரி அதிபர்கள்' என்று பெருஞ்சொற் கோட்டை கட்டி அரசின் அசமந்தப் போக்குக்கு பலியான பல 'கல்லூரி அதிபர்கள்' — பதில் அதிபர்கள், பணிபுரியும் அதிபர்கள், துணை அதிபர்கள், இணை அதிபர்கள் என்ற பல தினுசுகளுடன் அப்பதவிக்கு விண்ணப்பித்தோர் தொகையும் கூட்டப்பட்டால் ஒவ்வொரு நரத்துக்குதுக்கும் போட்டியிடுவர் பல்லாயிரக் கணக்கோர் மொத்தம் காணப்படுகிறது.

நேர்முகப் பரீட்சை நல்லூர்த்திருவிழா போன்று சனநெரிசல் ஏற்படக்கூடிய அபாயம் உண்டு; இருந்தும் வேண்டிய . உதவியுடன் கடந்த தாமதத்தை நினைந்து கவலைகொள்ளாமல் தேர் இழுபட்டு இருப்புக்கு வருவது அவசியம்.

அதனிலும் அவசியமானது தேர் வடத்தில் எம் போன்ற தொண்டர்கள் ஒழிய — பாரபட்சமற்ற அதிகாரிகள் — அரசியல் வாதிகள் கைதொடப்படாதென்று 'மைக்'கில் சொல்வது மட்டுமல்ல செயலில் அதன் உண்மை தெளிவு பெறவேண்டும்.

நாட்டில் சுமார் 2500 அரசாங்க பாடசாலைகள்; 146,000 ஆசிரியர்கள்; கல்விக்கு செலவிடும் பணம் சுமார்300கோடிரூபாவெனலாம்; அதிர்ச்சி ஊட்டும் இப்புள்ளி விபரங்களை கண்டு ஆவது பாடசாலைகளுக்கும், அவற்றை நிர்வகிக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் நீதி தாமதமின்றி வழங்கப்படவேண்டும்.

தேர்தல் ஆண்டில் சுடலைஞானம் தப்பான வழிகளிலும் அரசைத் திசைதிருப்பும் அச்சம் உண்டு. என்றுலும் 'சூடுகண்ட பூனை போல் கடந்த அனுபவங்களைக் கருத்தில் கொண்டு இக் கைங்கரியத்தை நேர்மையுடன் நிறைவேற்றுவதே சாலச்சிறந்தது. அதனல் அரசாங்கத்துக்கு வருங்காலம் வளமடையும்,

## நாமிருவர்

நாளை 30—01—1982 உலகுக்கே ஒரு சிறந்த தினம். உலக சரித்திரத்திலே, ஒரு புதிய அத்தியாயத்தை — ஏன் ஒரு புது யுக தர்மத்தை நிலைநாட்டிய காந்தி மகான் நினைவுதினம்.

அத்துடன் நாமிங்கு குறிப்பிட ஆவல் கொள்வது இந்த மகத்தான தினத்தில் பிறக்கும் எமது சகோதர பத்திரிகை பற்றியதே! ஒரு பெருங் கனவு நனவாகிறது பற்றியே!

பத்திரிகை உலகில் மகாத்மா காந்திக்கு ஒரு தனி இடம் உண்டு. பத்திரிகா தர்மம்—பதிவிரதாதர்மம் — உருவெடுத்தாற்போல் காட்சி அளித்து வந்தது அவர் வெளியிட்ட 'ஹரிஜன்'. (Harijan)

கொழும்பில், வெள்ளவத்தை 'மைசூர் கபே'யில் ஒவ்வொரு சனியும் விநியோகிக்கப்பட்ட 'ஹரிஜன்' வார இதழை வாங்குவதற்கு கற்றோர் விழுந்தடித்து ஆரவாரிக்கும் காட்சி எமது கண்முன் இன்றும் நிலவுகிறது.

நாளை யாழ்ப்பாணத்தில் பிரசவமாகும் நமது சகோதரன், ஒரு வயிற்றில் பிறவாவிட்டாலும், ஆங்கிலம் பேசினுலும், எம்மைப்போல் 'தினசரி' யில்லாமல் வார இதழாகத்தொடங்கினுலும் இவ்வேறு பாடுகளில் பத்திரிகா தர்மம் என்பது பரந்த அளவில் ஒற்றுமை ஊட்டுமென்பதில் ஐயமில்லை. நாமே வார விதழாகத் தோன்றினேம்.

24 வருடங்களைப் பூர்த்தி செய்யும் தினம் எமது பத்திரிகைக்குக் கிட்டும் வேளையில், எமக்கொரு 'வெள்ளைக்கார'ச் சகோதரன் பிறக்கிறுன் என்றகுதூகலம் எல்லையில்லாதது.

நாம் எமது கற்பை நிலைநாட்ட, பட்ட அவஸ்தைகளில் 'அக்கினிப்பிரவேசம்' இடம்பெற்றதை வாசகர்கள் அறிவார்கள். அதே போன்று சுதந்திரப் போக்கைக் கடைப்பிடிக்கும் 'Saturday Review' எட்டுத்திக்கிலும் தமக்கென ஒரு தனிச் சிறப்பான குரலை எழுப்பி வாசகர்களின் ஆதரவைப் பெருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேம்.

# எரிபொருள் நெருக்கடியும் அதன் பின்னணியும்

கடந்த தசாப்தத்தில் அதாவது 70ம் ஆண்டுகளில் இரண்டு எரிபொருள் நெருக்கடிகள் உலகைத் தாக்கின. ஒன்று 1973 ... 74ம் ஆண்டுகளிலும் அடுத்தது 1979லும் ஏற்பட்டது. இந்த இரு நெருக்கடிகளும் மேற்கு நாடுகளின் பொருளாதாரத்தில் படு மோசமான பிரச்னைகளைத் தோற்றுவித்தன. அது இளம் நாடுகளிடத்தும் பாதிப்பை ஏற்படுத்தத் தவறவில்லை.

-- ஆர். குலசேகரம் --

1980ன் இறுதியில் ஒபெக் நாடுகள் மீண்டும் எண்ணெய் விலை உயர்வை அறிவித்த போது இந்தப் பிரச்னைகள் மேலும்மோசமடைந்தன.

இந்த நெருக்கடிகளுக்கான காரணம் என்ன? எண்ணெய் விலையை உயர்த்திவரும் ஒபெக் நாடுகள்தான் மேற்குலகின் பொருளாதார நிலைமை சீர்குலையக் காரணமாக உள்ளன என்பது மேற்கு நாடுகளின் பொருளியல் நிபுணர்களினதும் அரசியல் வாதிகளினதும் வாதம்

இப்பொருளாதாரப் பிரச்னைகளுக்கான சகல பொறுப்புகளையும் பெற்ருேலிய ஏற்றுமதி நாடுகளான ஒபெக் நாடுகள்மீது சுமத்துவது சுலபம்தான். ஆனல் இப் பிரச்னைகளுக்கான காரணம் மேலும் ஆழமாகக் காணப்படுகிறது.

பெட்ரோல்வளம் மிகுந்த நாடுகளில் உள்ள எண்ணையை அப்படியே சுறந்துவரும் கைங்கரியத்தில் ஐ. ஓ. சி. எனக் கூறப்படும் சர்வதேச எண்ணெய் ஒப்பந்த அமைப்பு நீண்டகாலமாக முன்னிற்கிறது. 70களின் ஆரம்பம் வரை மேற்குலகின்எண்ணெய் சந்தையை இந்த ஐ. ஏ. சி தான் பூரணமாகக் கட்டுப்படுத்தியிருந்தது, எண்ணெய் உற்பத்தி நாடுகளுடன் செய்து கொண்டிருந்த நியாயமற்ற ஒப்பந்தங்கள் இந்தச் சர்வதேச அமைப்பு, அந்நாடுகளிடமிருந்து பெட்ரோலை உறிஞ்சியெடுக்க வகையளித்தது.

எண்ணெயை அந்த நாடுகளிடமிருந்து மிகக் குறைந்த விலைக்கு வாங்கவும் இந்த ஒப்பந்தங்கள் உதவின. இதைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு நோக்கங்கொண்ட ஐ. ஏ. சி, எண்ணெய் உற்பத்திசெய்யும் நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடு செய்தன.

எண்ணெய் வர்த்தகத்தில் பெருநிறுவனங்கள் ஈட்டிய லாபம் கொஞ்சநஞ்சமல்ல. மண்டியெண்ணெயை விற்ற எண்ணெய்வள நாடுகள், மேற்கைரோப்பாவில் விற்கப்பட்ட எண்ணெயிலிருந்து 8 சதவீதமான பணத்தையே பெற்றன. மீதி 92 சதவீதமும் எண்ணெய் ஏகபோகங்களிடமும் எண்ணெய் இறக்குமதி செய்த நாடுகளிடமுமே சென்றன.

தமது எண்ணெய் சந்தையை விஸ்தரிக்க பெரு நிறுவனங்கள் சகல வழிகளையும் மேற்கொண்டன. நிலக்கரியைக் காட்டிலும் குறைந்த விலைக்கு எண்ணெயையும் பெற்ருேலியப் பொருட்களையும் விற்றன. இதனல் உலக சக்திவள சமநிலையில் 1960ல் 31 சதவீதமாக இருந்த எண்ணெய் 1973ல் 53 சதவீதமாக உயர்ந்தது. நிலக்கரி 56 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாகக் குறைந்தது. 1960முதல் 1973 வரை சர்வதேச எண்ணெய் நிறுவனங்கள் பெற்ற நிகரலாபம் 700,000 கோடி டாலர்களுக்குமதிகமே. அதே வேளையில் ஒபெக் நாடுகள் 9500 கோடி டாலர்களையே பெற்றன.

வளர்முக நாடுகளிலிருந்து மிக மலிவான விலைக்கு மூலப் பொருட்களையும் எண்ணெயையும் பெற்றதனல், 2வது உலக யுத்தத்திலேற்பட்ட பொருளாதார இழப்புகளிலிருந்து மேற்குலகம் தலை தூக்கவும் செல்வம் கொழிக்கவும் வாய்ப்பாயிற்று. 1974—1975ல் ஏற்பட்டது போன்ற நெருக்கடிகள் எதுவும் ஏற்படவில்லை.

ஆனல் உலக சக்திகளின் சமநிலையில் ஏற்பட்ட மாற்றத்தினல் மேற்குலகின் இந்தநிலை தொடர்ந்து நீடிக்கவில்லை. உலகின் சமத்துவமற்ற பொருளாதார அமைப்பை மாற்றவேண்டுமென்று, வளர்முக நாடுகள் குரல் கொடுத்தன. எண்ணெய் உற்பத்தி நாடுகள் எண்ணெய் விலையை அதிகரித்ததுடன் எண்ணெய் உற்பத்தியைக் குறைக்கவும் செய்தன.

(7ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

### நாடகப் பயிற்சி இங்கும் நடைபெறுமா?

சென்ற வியாழக்கிழமை 21ம் திகதி வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில் செட்டிகுளத்தில் நடைபெற்ற வளரும் கலைஞர்களுக்கு மேடை நாடகப் பயிற்சி என்ற கருத்தரங்கில் நடைபெற்ற சில கருத்துக்களை என். கே. தர்மலிங்கம் என்பவர் வெளியிட்டிருந்தார். இதனை வாசித்த எனக்கு இவ்வாறுன கருத்தரங்கும், பயிற்சியும் யாழ். மாவட்ட அடிப்படையில் நடத்தினுல் என்போன்ற ரசிகர்களுக்கு பெரும் உதவியாக இருக்குமென நினைக்கிறேன். எனவே செட்டிகுளத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்ற அடிப்படையில் அமைந்தது போல் யாழ். மாவட்டத்தில் நடைபெறுமா? அவ்வாறு நடைபெறுவதற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆவன செய்வாரா? அவ்வாறு நடைபெற்றுல் யாழ். வளரும் கலைஞர்களுக்கும், ரசிகர்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும்.

இ. சூரியகுமாரி,
(யாழ். இந்து மகளிர் கல்லூரி)

மாவிட்டபுரம் கந்தசாமிகோயில்
இலட்சார்ச்சனை இன்று ஆரம்பம்

# வினைதீர்க்கும் முருகன் திருநாமம்

கலியுக வரதன் முருகன் துன்பப்படுவோர்க்கு ஆறுதல் தர ஆறு முகம் கொண்டு அவதரித்தவா அவரின் சருணைகூர் ஆறுமுகங்களை , ஆதிசங்கரர் தமது 'சுப்பிரமணிய புஜங்க தோத்திரம் என்ற நூலில் பின்வருமாறு . அழகுபடக் கூறுகிருர்.

''ஆறுமுகப் பெருமானே! ஆறு தாமரை மலர்களை உன் ஆறு முகங்களுக்கு உதாரணமாகச் சொல்லலாம். அந்த முகங்களில் தோன்றும் புன்சிரிப்பு தாமரை மலரில் சஞ்சரிக்கும் அன்னப்பட்சிகள் போன்றவை. எப்போதும் அசைந்து கொண்டிருக்கும் கடைக்கண் பார்வைகள் தேனைக் கிரகிக்க வந்த அறுகால் வண்டுகளாகும்''

''முண்டக மலர்ந்த தன்னமூவிரு முகமும் கண்ணும்'', எனக் கந்தபுராண நூலாசிரியரும் கூறினுர். முருகன் அடியார்க்கு நல்ல பெருமான் அவுணர்குலமடங்கப் பொடியாக்கிய பெருமான். புறத்திலே வரும் தீமைகளை மாத்திரமல்ல நம் அகத்திலே உள்ள தீமைகளையும் நீக்க வல்லவர். அவரின் அருளை அடைய வழி அவரின்திருநாமங்களைக் கூறுவதுதான் அவருடைய ஒரு நாமம் குமரா என்பது. அந்த ஒரு நாமத்தைக் கூறினுலே பெரும் பயன் கிட்டும்.

''குமரா நமவென்று
கூறினுர் ஓர் கால்
அமரா வதிசென்
றரசாள்வர்—எமராசன்
கை புகுதார் போரூரன்
கால்புகுவார் தாயுதரப்
பை புகுதார் சேரார் பயம்''

என்பது திருப்போரூர்ச் சந்நிதி முறை. பஞ்ச முகத்தினராகிய சிவபெருமானும், ஏகமுகத்தினராகிய சத்தியும் சேர்ந்தே அறிஞர் சிந்திக்கும் ஆறுமுகமாயது என்பது பெரியோர் கொள்கை. அவரது திருக்கரத்தில் இருப்பதோ ஞானசக்தியாகிய வேல். ஊர்தியோ பிரணவ ரூபமாகிய மயில். சத்திகளோடுசேர்த்து வணங்கப்படும் முருகப் பெருமான் சகல மங்களங்களையும் கொடுக்க வல்லவர். தாமம், மங்களம், இவற்றை வளர்ப்பதால் சுப்பிரமணியர் எனக் கூறப்படுகிருர். அடியார் உள்ளத் தாமரையில் வீற்றிருப்பதால் ''குகன்'' எனஅழைக்கப்பெறுகிருர்.

-- வ. குகசர்மா --

முருகப் பெருமானுடைய ஆயிரம் நாமங்கள் உடையது சஹஸ்ர நாமம் எனப்படும். இந் நாமங்கள் முனிவர்கள். தேவர்கள் இவர்களால் ஓதப் பெற்றும் அருச்சனை செய்யப் பெற்றும் பெரும் பலன் அடையப் பெற்றனர்.

''இந்த சண்முகப் பெருமானுடைய ஆயிரம் நாமங்களையும். பத்தியுடன் யார் ஓதுகிருர்களோ யார் கேட்கிருர்களோ, அவர்கள் தம் மனம் வாக்குக் காயங்களால் செய்த பாபங்களில் நின்று விடுபடுகிருர்கள். நீண்ட ஆயுளும் செல்வமும் ஏற்படுகிறது'' என்பது நாரத முனிவர் வாக்கு.

(7ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் வெளிநாட்டு இராணுவத்தளம் அமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது

## புதுடில்லியில் 'ரெனி' வலியுறுத்து

புதுடில்லி, ஜன, 28

இலங்கையில் எக்காரணங்கொண்டும் எக்காலத்திலும் வெளிநாட்டுஇராணுவத்தளங்கள்அமைக்க அனுமதிவழங்கப்படமாட்டாது. வெளிநாட்டு இராணுவத் தளங்கள் அங்கு அமைக்கப்பட உள்ளதாகக் கூறப்படுவதில் எதுவித உண்மையும் கிடையாது,

இவ்வாறு இலங்கை நிதி அமைச்சர் திரு. ரெனி டிமெல் புதுடில்லியில் கூறினர்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்த பின்னர் திரு. மெல் புதுடில்லியில் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை நடத்தினர்.

அப்பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:

சகல வெளிநாடுகளினதும் கப்பல்களும் இலங்கை வந்து செல்ல அனுமதிக்கப்படுமே ஒழிய எக்காரணம்கொண்டும் இராணுவத்தளங்கள்அமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

இலங்கை மண்டலசார்பற்ற கொள்கையையே கடைப்பிடித்துவருகிறது. தொடர்ந்தும் அக்கொள்கையையே கடைப்பிடித்துவருர். (இ)

---

உபாலி விஜேவர்த்தன

## ஐ.தே.க. உறுப்பினரல்ல

(கொழும்பு)

திரு. உபாலி விஜேவர்த்தன ஐக்கியதேசியக் கட்சியின் அங்கத்தவர் அல்ல என்று ஐக்கியதேசியக் கட்சியின் செயற்குழு தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கட்சி செயற்குழு கூடிய போது திரு. உபாலி விஜேவர்தன கட்சியின் அங்கத்தவர் தானு என ஆராயப்பட்ட போதே மேற்படி கட்சியில் அவர் அங்கத்துவம் பெறவில்லையென்பது தெரியவந்தது.

கரந்தெனிய தொகுதிக்குப் புதிய அங்கத்தவரை நியமிப்பது தொடர்பாகவும் செயற்குழு ஆலோசனை நடத்தியது. (கி)

---

## கொலம்பியா விமானம் ஆயுதமுனையில் கடத்தல்!

பொகோட்டா, ஜன. 28

கொலம்பியாவுக்குச் சொந்தமான 'போயிங்' விமானம் ஒன்று நடு வானில் வைத்து ஆயுதமுனையில் கடத்தப்பட்டது.

கொலம்பியாவின் தலைநகரான பொகோட்டாவிலிருந்து 130 பிரயாணிகளுடன் மற்றொரு நகருக்குச் சென்றுகொண்டிருந்த விமானமே கடத்திச் செல்லப்பட்டதாகும்.

கொலம்பியாவைச் சேர்ந்த ஏழு இடதுசாரி கொரில்லாக்களே இவ்விமானத்தைக்கடத்திச் சென்றுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

---

### கால்நடையாக உலகவலம்!

சென்னை, ஜன. 28.

ஆந்திராவைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் கால்நடையாக உலகை வலம்வரும் முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

இதுவரை 3,500 கிலோமீட்டர் தூரத்தை நடந்துள்ள கே. வெங்கடேசன் என்ற அந்த இளைஞர் தற்போது சென்னையில் நிற்கிருர். (கி)

---

## கே. எஸ். ராஜாவுக்கு தங்கப்பதக்கம்

(சம்மாந்துறை)

இலங்கை வானொலி அறிவிப்பாளர் திரு. கே. எஸ்.ராஜாவுக்கு 'அறிவிப்பாளர் வேந்தன்' எனும் சிறப்புப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறையில் டியூலக்ஸ் கழகத்தினரால் நடாத்தப்பட்ட கலைக்கதம்ப நிகழ்ச்சியில் பிரதமஅதிதியாகக்கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட அமைச்சரும், தபால் தந்தித் தொடர்புகள் பிரதி அமைச்சரும் சம்மாந்துறை பாராளுமன்ற உறுப்பினருமான ஜனுப் எம். ஏ. அப்துல் மஜீத் திரு. கே. எஸ். ராஜாவுக்கு 'அறிவிப்பாளர் வேந்தன்' என்ற சிறப்புப்பட்டம் பொறிக்கப்பட்ட தங்கப் பதக்கத்தை அணிவித்து கௌரவித்தார், விழாவில் பெருந்திரளான வானொலி ரசிகர்களும், பிரமுகர்களும், பொது மக்களும் பங்குபற்றினர்கள்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் தமது உரையில் கே. எஸ். ராஜாவின் புதுமையான வானொலி அறிவிப்பு இலங்கை மக்களைமட்டுமல்லாது வெளிநாட்டவர்களையும் பெரிதும்கவர்ந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

---

### இறந்தோர் தொகை 64 ஆக அதிகரிப்பு

ஆக்ரா, ஜன. 28

ஆக்ராவில் நிகழ்ந்த ரயில் விபத்தில் மரணமானேர் தொகை 64 ஆக அதிகரித்துள்ளதாகவும் ஐலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

ஐரிஸ் குடியரசு

### பட்ஜட்டில் தோல்வி!

லண்டன், ஜன, 28

ஐரிஸ் குடியரசு அரசாங்கம் வரவுசெலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசு ஏழுமாத காலமே பதவிவகித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

---

இந்தியாவில் தொழில்

## நிபுணர்களைப் பயிற்றுவதில் சோவியத் உதவி

புதுடில்லி, ஜன 27

சுதந்திரம் கிடைத்த பின்னர், வேகமாகத் தொழில் மயமாக்கும் முக்கிய கடமையை நிறைவேற்றுவதோடு கூடவே, இந்திய அரசு தேசிய ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும் கவனத்தை முனைப்பாக்கியது.

இத்துறையில் சோவியத் யூனியன் சிறந்த உதவி புரிந்துள்ளது. சோவியத்—இந்திய ஒத்துழைப்பு ஆண்டுகளின் போது 1,20,00க்கு மேற்பட்ட இந்தியத் தனிச்தேர்ச்யாளர்கள் சோவியத் உதவியுடன் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார நிர்வாகத்தில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை ஈடுபடச் செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜவாஹர்லால்நேரு. ஓர் ஆலையை நிர்மாணிப்பதைவிட அதை நடத்திச் செல்வதுபற்றி மக்களுக்குக் கற்றுக் கொடுப்பது இன்னும் கடினமானது என்று சுட்டிக்காட்டினர்.

இந்தியாவில் 70க்கு மேற்பட்ட பெரும் திட்ட நிலையங்களை நிர்மாணிப்பதில் சோவியத் ஈடுபாட்டினல் இந்தியப் பொறியியலாளர்களும் தொழிலாளிகளும் நல்ல பலன்களை அடைந்துள்ளனர். சோவியத் கலந்தாலோசனைகள், வடிவமைப்புகள், தொழில் நுட்ப தஸ்தாவேஜுகளினல் இந்திய தொழில் தொழில்நுட்ப ஊழியர்களும், நிர்மாணிகளும் கூடுதல் தொழில் அனுபவம் பெற்றதோடு கூடவே, 50ம் 60ம் ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, இந்திய நிர்மாணத் தலங்களில் இப்போது குறைந்த சோவியத் நிபுணர்களே காணப்படுகின்றனர்.

இத்தகைய திட்ட நிலையங்களில், ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களை சேர்த்துக்கொள்ளுவதற்கு வசதியுடை பயிற்சி மையங்களில் ஏற்கனவே 80,000க்கு மேற்பட்ட தேர்ச்சிபெற்ற தொழிலாளிகளும் தொழில் நிபுணர்களுங் பயிற்சிபெற்றுள்ளனர்.

இந்தியா தனது கல்வி அமைப்புக்களை பரவலாக நிர்மாணிப்பதிலும் சோவியத் யூனியன் அதற்கு உதவிபுரிகிறது இத்திசையில் கல்லூரி நிர்மாணிக்கப்பட்டதுதான் முதல் நடவடிக்கையாகவிளங்கிற்று!

இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு வெகு முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் தனித்தேர்ச்சி அளிப்பதற்கான தற்போதுள்ள கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் புதிய கல்விப் பிரிவுகளை உருவாக்குவதிலும் சோவியத்யூனியன் பங்குபற்றி கரப்பூர் தொழில்நுட்பக் கல்லூரியிலுள்ள பூபௌதிகப் பிரிவும், பம்பாய் தொழில் நுட்பக் கல்லூரியில் விமான நிர்மானப் பிரிவும், பங்களூர் விஞ்ஞானக் கல்லூரியில் தானியங்கி மற்றும் கம்பியூட்டர் பிரிவும் இவற்றில் உட்படும்.

சோவியத் உதவி பெற்ற செகண்டரி பள்ளிகள் இந்திய நடுத்தரப் மட்ட தொழில் துறை ஊழியாகள் அதிகரிப்பதற்கு உகந்ததாயிருக்கின்றன உலோகவியல் பள்ளியிலாயிலும் இந்திய நிர்மானப் பள்ளி ராஞ்சியிலும், எண்ணெய் எரிவாயுத் தொழில்பள்ளி பரோடாவிலும் மின்னணு விசைப்பொறியியல் பள்ன் ஐதராபாத்திலும் உள்ளன, இந்தத் தொழில்நுட்பப் பள்ளிகளின் பாடத்திட்டத்தை வகுப்பில் சோவியத் பேராசிரியர்களும் ஆசிரியர்களும் பங்கு கொள்கின்றனர்.

சோவியத் உதவியுடன் இந்தியாவில் கட்டப்பட்ட மேலுயர் மற்றும் விசேஷ செகண்டரிப் பள்ளிகள் ஏற்கனவே 36,000க்கு மேற்பட்ட நிபுணர்களைப் பயிற்றுவித்துள்ளது.

---

## "தமிழரசுக்கட்சியின் பொதுச் சபையை உடன் கூட்டுக"

### அமிருக்கு ஜெயக்கொடி வேண்டுகோள்

[புலோலி]

தமிழரசுக் கட்சியைப் புனரமைப்புச் செய்யுமாறு கோரி தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகரும், முன்னுள் உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. கே. ஜெயக்கொடி தமிழரசுக் கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

திரு. ஜெயக்கொடி, திரு. அமிர்தலிங்கத்திற்கு விடுத்துள்ள பகிரங்க வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1972ம் ஆண்டில் தமிழரசுக் கட்சியின் கடைசி மகாநாடு மல்லாகத்தில் நடந்ததும், அம்மகாநாட்டில் நீங்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதும், தமிழரசுக்கட்சி சமஷ்டி அரசியல் அமைப்பைக் கைவிட்டு தமிழ்ஈழ லட்சியத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டதும் தெரிந்ததே.

காலிமுகத்திடலில் தந்தை செல்வாவோடும் தங்களோடும் சேர்ந்து சத்தியாக்கிரகத்தில் கலந்தோர் 'சிறீ' எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குபற்றி மறியலுக்குச் சென்றோர் திருமலை யாத்திரையில் பங்குபற்றியோர், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோர், வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வருகை தரும் அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தோர் உண்ணுவிரதங்களில் பங்குபற்றியோர், பனகொடை முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோர் முதலானவர்களில் பல்லாயிரக்கணக்கானேர் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலில் விரக்தியடைந்தும், விடுதலை இயக்கத்தில் குதிக்கத் துடித்துக் கொண்டும் இருக்கின்றார்கள்.

அவர்கள் ஒன்றுகூடிச் செயற்படத் தகுதியான இயக்கம் தமிழரசுக்கட்சியே என எண்ணுகிறார்கள். எனவே தமிழரசுக்கட்சியைப் புனருத்தாரணம் செய்து தீவிரமாக இயங்க வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக ஏடுக்க வேண்டுல்.

முன்னுள் கோப்பாய் எம். பி.யான அமரர் கதிரவேற்பிள்ளை தமிழரசுக்கட்சியின் செயலாளராக இருந்தார். அவர் இறந்தபின் யார் செயலாளர் என்று தெரியவில்லை. அவர் உயிருடன் இருந்து 30க்கும் மேற்பட்ட பொதுச்சபை உறுப்பினர்கள் மகாநாட்டை கூட்டுமாறு கேட்டிருந்தும் எதுவும் நடைபெறவில்லை.

எனவே தமிழரசுக்கட்சிப் பொதுச்சபையையும் கூட்டி மகாநாட்டையும் நடத்துவதற்கு ஒழுங்கு செய்வீர்களென நம்பி இப்பகிரங்க வேண்கோளை விடுக்கின்றேன்.

---

## கிளிநொச்சியை தனி கல்விமாவட்டமாக்குக

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சித் தொகுதியை தனிக்கல்வி மாவட்டமாக்க வேண்டும்என்ற பிரேரணையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரேரணை கிளிநொச்சி பரந்தன் வட்டார இ. த. ஆ. சங்கக் கிளைகள் இணைந்து கொண்டுவரவிருக்கின்றன.

கிளிநொச்சியில் நீண்டகாலமாக நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கவும் பலதரப்பட்ட தகைமையுள்ள ஆசிரியர்களின் சேவையைப் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தவும், பாடசாலைக் கட்டட வசதிகள், தளபாட வசதிகள், ஆசிரியர்களின் உத்தியோக தோரணையிலான பிரச்னைகளைத் தவிர்த்தல், வசதிகளை ஏற்படுத்தல் ஆகியவற்றிற்கு இது அவசியமென அப்பிரேரணையில் கூறப்பட்டுள்ளது. (க)

---

### கொழும்புத்துறையில் ஞான ஒடுக்கம்

(அரியாலை)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் ஆதரவில் வெள்ளிக்கிழமை மாலை தொடக்கம், ஞாயிற்றுக் கிழமை மாலைவரை, கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்தில் ஞான ஒடுக்கம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஞான ஒடுக்கத்தில் கலந்து கொள்ளுமாறு ஒன்றிய அங்கத்தவர்களை ஒன்றியச் செயலாளர் செல்வன் எம். டி. றெவல் கேட்டுள்ளார். [அ]

## பிரேமன் கொலைவழக்கு

# "உடைந்த சோடா போத்தலால் 1ம் எதிரி, பிரேமனை வெட்டினர்"

## குறுக்கு விசாரணையில் இராஜேந்திரம்

(யாழ்ப்பாணம்)

பொலிசாருக்கு. 1ம் எதிரி உடைந்த சோடாப்போத்தலால் பிரேமனை தாக்கினர் என்று நான் கூறவில்லை. வெட்டினர் என்றுதான் கூறினேன். மரணவிசாரணை அதிகாரிக்கு 2ம் 3ம் எதிரிகள் பிரேமனை பிடித்தார்கள் என்று கூறிய ஞாபகமில்லை. அப்படி கூறியிருந்தால் அது பிழை.

பிரேமன் கொலைவழக்கில் சாட்சியமளித்த இராஜேந்திரம் குறுக்குவிசாரணையின் போது மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நீதவான் ரி.ஜோகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ் வழக்கில் 81 நவமபர் 1ம் திகதி பிரேமனை கொலை செய்ததாக நடேசு யோகராசா அல்லது போயா வேலுப்பிள்ளை கந்தசாமி அல்லது வெள்ளையன் சுப்பிரமணியம் விஜயராசா அல்லது விஜயன் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம ஆஜராஞர். வழக்காளி தரப்பில் பொலிசாரின்உதவியுடன் சட்டத்தரணி வீ. நடராசா ஆஜராஞர்.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் குறுக்குவிசாரணை செய்கையில் சாட்சியமளித்த இராஜேந்திரம் கூறியதாவது: 2ம் எதிரி வாளுடன் வந்ததும் என்னைத் தாக்கினர். அப்போது பிரேமன் எனக்குப் பக்கத்தில் நின்றர்.

சட்: வாளுடன் வந்த 2ம் எதிரி பிரேமனை தாக்கவில்லை?... இல்லை. 2ம் எதிரி என்னை வேறு இடங்களில் தாக்கவில்லை. எனக்கும் இரண்டாம் எதிரிக்கும் கோபதாபங்கள் இல்லை. எனக்கும் 1ம் எதிரிக்கும் கோபதாபம் இல்லை. எனக்கும் 3ம் எதிரிக்கும் கோபதாபமில்லை. 2ம் எதிரி, பிரேமனை நான் காணக்கூடியதாக தாக்கவில்லை. 3ம் எதிரியும் பிரேமனை நான் காணக்கூடியதாக தாக்கவில்லை.

சட்: 2ம் எதிரி வெள்ளையன் பிரேமனை தாக்கநினைத்திருந்தால் வாளுடன் வந்த போது பிரேமனை வெட்டியிருக்கலாம்? எனக்கு தெரியாது.

சட்; கோர்ட்டிற்கு முன்பு எத்தனை தடவை வந்திருக்கிறீர்? — 1 தடவை.

சட்: எதற்காக? ஒரு அடிபட்ட வழக்கிற்காக. அந்த வழக்கு விசாரணை இன்னும் முடியவில்லை.

### பிரேமனும் எதிரியா?

அநத வழக்கில் இறந்த பிரேமனும் ஒரு எதிரியா?— இல்லை. அந்த வழக்கு இலக்கம் தெரியாது. இந்த நீதிமன்றத்தில்தான் அந்த வழக்கு விசாரணையிலிருக்கிறது.

சட்: அந்த வழக்கில் உமக்கு எதிராக பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டது தெரியுமா?... தெரியாது.

### கப்பம் கேட்டதாக...

சட்: அந்த வழக்கில் நீரும் பிரேமனும் கப்பம் கேட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது?— இல்லை. அது அடிபட்ட வழக்கு.

சட்: அந்த வழக்கில் உமக்கும், பிரேமனுக்கும், குற்றச்சாட்டுப் பத்திரம் இருந்தாலும் பிரேமன் பொலிசாரிடம் இருக்கவில்லை?— இல்லை.

சட்: அந்த வழக்கில் மின்சாரநிலைய வீதியில் ஸ்தாபனமொன்றில் நீரும் பிரேமனும் சென்று 10 ரூபா கப்பம்கேட்டதாக குற்றம்சுமத்தப்பட்டது தெரியுமா? தெரியாது. அந்த வழக்கு அடிபட்ட வழக்கு. கப்பம் கேட்ட வழக்கல்ல.

சட்: அந்த வழக்கில் உமக்கு பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டது தெரியுமா? —தெரியாது.

சட்: அந்தவழக்கில் உம்மை பிணைவிட்டது தெரியுமா?— தெரியும்.

சட்: அந்த வழக்கில் குற்றச்சாட்டு ஞாபகமில்லை?— இல்லை.

சட்: ஏன் குற்றச்சாட்டு ஞாபகமில்லை?— (பதிலில்லை).

### பிணைவிட்டது ஞாபகம்

சட்: பிணைவிட்டது ஞாபகம்?— ஆம்.

சட்: வழக்கு ஞாபகமில்லை? —வழக்கு இருப்பது தெரியும். அது அடிபட்ட வழக்கு. அந்த வழக்கில் முதல் தவணைக்கு வந்தேன். அடுத்த தவணை எப்ப என்று எனக்கு கூறப்படவில்லை. முதலியார் ஐயா நீர் போகலாம் என்றர், நான் போய்விட்டேன்.

சட்: பிணை கொடுக்கப்பட்ட போது அடுத்த தவணை கூறப்பட்டது?— அடுத்த தவணைக்கு வந்தனுன்.

சட்: அடுத்த தவணைக்கு வராததினல் பிடிவிறந்து பிறப்பிக்கப்பட்டது?—அடுத்த தவணைக்கு தகப்பனரும் வந்தார்.

சட்: பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டது தெரியுமா?— அந்த தவணைக்கு நான் வந்தனுன்.

### டாக்ஸி நின்றது

சட்: ஆரியகுளம் சந்தி வாசிகசாலைக்கு முன்னல் டாக்சி நின்றது?... ஆம்.

சட்: வாசிகசாலை எப்பக்கம்?... பருத்தித்துறை வீதிப்பக்கம். அந்த வாசிகசாலை ஆரியகுளம் சந்திக்கு பக்கத்தில்தானிருக்கிறது.

சட்: பாரத் கபேக்கு முன்னல் இருக்கிறது?... ஆம்.

சட்? டாக்ஸி மறித்தது வாசிகசாலைக்கு முன்னல்? ஆம் டாக்ஸி வின்சர் தியேட்டர் பக்கம் நோக்கி நின்றது. எப்பக்கத்திலிருந்து வந்தது. அது தெரியாது.

சட்: வின்சர்தியேட்டர் பக்கம்நோக்கிநின்றல்இராசாவின் தோட்டப்பக்கமாக வந்திருக்கும்? — ஆம்.

சட்: பிரேமனும் நீரும் ஆரிய குளம் சந்திக்கு வந்தீர்கள்? — ஆம்?

சட்; வாசிகசாலை முன்னல் டாக்ஸி நிற்பதென்றல் உங்களுக்கு எதிராகநிற்கவேண்டும்? ஆம்.

சட்; உங்கள் இடதுபக்கம் வந்திருக்கவேண்டும். — ஆம்.

சட்: ஆனபடியால் டாக்ஸி வந்தது தெரிய வேண்டும். நின்றதைக் கண்டேன்.

சட்; எந்தப் பக்கமாக டாக்ஸி வந்தது. — குட்செட்' பக்கமாக.

சட்: சந்தியில் மணியத்தின் கடை தெரியுமா? — ஆம்,

சட்; அவரை தெரியுமா? ஆம்.

சட்: 1ம் சாட்சி செல்வராசாவை தெரியுமா? — ஆம்.

### வாசிகசாலை தலைவர்

சட்: அவர் தான் அந்தப் பகுதிக்கு தலைவர். அவரை தலைவர் என்று அழைப்பார்கள். அவர் வாசிகசாலை தலைவர்.

சட்: டாக்ஸி நின்ற இடத்திற்கும் மணியம் கடைக்கும் எவ்வளவு தூரம்? — 30 யார் இருக்கும்.

### 1ம் சாட்சியை கண்டேன்

சட்: 1ம் சாட்சி செல்வராசாவை அங்கு கண்டீரா? ஆம். நான் கதைக்கவில்லை. பாரத் கபேக்கு முன்னல் அவர் நின்றர். டாக்ஸியில் ஏறியதும் காங்கேசன்துறை வீதி நோக்கி டாக்ஸி நின்றது. டாக்ஸியில் ஏறுமுன்னர் பிரேமனுக்கும் எதிரிகளுக்மிடையில் 5 நிமிடம் பேச்சு வார்த்தை நடந்தது.

### காரசாரமாக நடந்தது

சட்: காரசாரமான சப்பாஷணையா? — ஆம். காரசாரமாக நடந்தது.

சட். அந்த சம்பாஷணையைப் பார்த்தபோது கைகலப்பில் முடியப் போகிறது என்று தெரிந்தது. ஆம். எனக்கும் எதிரிகளுக்குமிடையில் எவ்வித சம்பாஷணையும் நடக்கவில்லை.

சட்: டாக்ஸிக்கு பக்கத்தில் நின்று தான் காரசாரமான பேச்சு நடந்தது. ஆம்.

சட்: டாக்ஸியில் சாரதி இருந்தார், ஆம்.

சட்: சாரதிக்கு இச்சம்பாஷணை கேட்டிருக்கும். அதைப் பற்றி எனக்கு தெரியாது.

சட்: சாதரணமாக ஒரு சாரதி அருகில் இருந்திருந்தால் கேட்டிருக்கும். — ஆம்.

சட்: வாக்கு வாதத்தில் நீர் தலையிடவில்லை. — இல்லை.

சட்: உமக்கு 3 எதிரிகளையும் தெரியும். பெயர் தெரியும். கதைப்பதில்லை. அவர்களை கண்டிருக்கிறேன். அவர்கள் எனக்கு உறவினரில்லை. கலியாணம் முடிந்த வகையிலும் அவர்கள் எனக்கு உறவினர் இல்லை.

சட்: உமது மாமன் மகன் 1ம் எதிரியின் அக்காவை திருமணம் செய்தாரா? — இல்லை.

சட்: 1ம் எதிரியின் அக்காவின் புருஷனின் தாயும்,உமது தாயும் சகோதரரா? —இல்லை

சட்: டாக்ஸியில் 3ம் எதிரிக்கும், பிரேமனுக்கும் சப்பாஷனை நடந்தது? —ஆம்

3ம் எதிரி பிரேமனை, என்னடா கடையில் சேட்டை விட்டாய் என்றர். அதுதான் சந்தியில் சொல்லி விட்டேனே என பிரேமன் பதிலளித்தார். கைகலப்பு ஏற்படும் நிலை வந்ததும் 1ம் எதிரி போயா சமாளித்துவிட்டார்

சட்: வாசிகசாலைக்கு முன்னல் டாக்ஸியில் ஏறுனீர்கள்? — ஆம்

சட்: டாக்ஸிசாரதி, ஸ்ரான்லி வீதியில் விகாரைக்கு முன்னல் ஏறினர்கள் என்று கூறினல் அது சரியா? —இல்லை

சட்; 5பேர் டாகஸியை மறித்தார்கள் என டாக்ஸி சாரதி கூறினர் அது சரியா?— இல்லை

சட்: உமக்கு டாக்ஸி சாரதியை தெரியும்? —ஆம்

சட்: அந்த டாக்ஸிபற்றித் தான் இங்கு கூறுகிறீர்? —ஆம்

### தலையில் காயம் ஏற்பட்டது:

சட்: உமக்கு காயம் ஏட்பட்டதா? — தலையில் காயம் ஏர்ப்பட்டது. மருந்து கட்டினனன் ஒருநாள் ஆஸ்பத்திரியில் இருந்தேன்

சட்: 2ம் எதிரி வெள்ளையன் கொண்டுவந்த வாள் எவ்வளவு நீளம்? — ஒன்றரை அடி நல்ல கூரிய வாள் அநத வாளல்தான் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. 3ம் எதிரி கையால் என் நெஞ்சில் அடித்தார். அதனல் காயம் ஏற்படவில்லை டாக்டருக்கு, வாளால் ஏற்பட்டகாயம் என்று சொன்னேன். காயம் ஏற்படுத்தியவர் பெயரையும் சொன்னேன்

சட்: 1ம் எதிரி என்ன செய்தார்? — உடைந்த சோடாப் போத்தலால் வெட்டினர்

சட்: தாக்கினர் என்றல் என்ன அர்த்தம்?— அடித்தார் என்பது

சட்: பொலிஸ் வாக்குமூலத்தில், 1ம் எதிரி போத்தலால் தாக்கினர் என்றீரா? — அப்படிக் கூறவில்லை வெட்டினர் என்றுதான் கூறினேன்.

சட்: மரணவிசாரணை அதிகாரிக்கு 2ம், 3ம் எதிரிகள் பிரேமனைப் பிடித்தார்கள் என்று கூறினீரா?— ஞாபகமில்லை. அப்படிக் கூறியிருந்தால் அது பிழை

சட்: ஆரியகுளம் சந்தியில் 1ம் எதிரி, பிரேமனுடன், கதவளிப்படவில்லை?—இல்லை

1ம் எதிரி பேசாமலிருந்தார். டாக்ஸிக்குள்ளும் 1ம் எதிரி பிரேமனுடன் பேசவில்லை.

விசாரணை பெப்ரவரி 1ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. [க]

## விமானக் கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

பெப்ரவரி மாதத்திலிருந்து இலங்கையின் விமானச்சேவையான எயர் லங்கா உட்பட சகல சர்வதேச விமானச் சேவைகளும் தமது பயணக் கட்டணங்களை 5 சத வீதத்தால் அதிகரிக்கவுள்ளன.

இக் கட்டண உயர்வுகளை இலங்கை அரசாங்கம் ஏற்றுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதத்திலேயே சகல விமானச் சேவைகளது கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், கொழும்பிலிருந்து ஏனைய இடங்களுக்குச் செல்லும் கட்டணம் பெப்ரவரியிலிருந்தே அதிகரிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கி]

## யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம்

(அரியாலை)

யாழ். கிரிக்கட் மத்தியஸ்தர்சங்கத்தின் வருடாந்தக்கூட்டத்தில் புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராகத் திரு. பி. மகேந்திரனும், உப தலைவராக திருவாளர்கள் வி. பாலசிங்கம், ஆர். கனகலிங்கம், கே. மார்க்கண்டன், கே. பூபாலசிங்கம், ரி. விசுவநான் ஆகியோரும், செயலாளராக திரு. கே. எஸ்.ஈ. சேவியரும், உபசெயலாளராகவும், பொருளாளராகவும் திரு. ஏம், டி. தம்பிராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர். ஐந்துபேகளைக் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. [உ]


27%

இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பமான
பினன்ஸ் கம்பனி. ஸ்தாபிதம்: மே 1940-ம் ஆண்டு

இயக்குநர்கள்

திரு. ஜே. எல். பி. கொத்தலாவெல, ஏ. எம். எக்ல. லண்டன் (தலைவர், நிர்வாக இயக்குநர்)
திரு. பீ. டி. விசுவாசம் எவ். சி. ஏ. (நிதி இயக்குநர்)
சட்டத்தரணி திருமதி பீ. கே. கருணநாயக்கா (பொது முகாமையாளர்)
திருமதி என். மடவெல (காரியதரிசி)
திரு. டி. ஆர். சேனநாயக்கா ஏ. எம், எக்ல் ஏ. லண்டன்
சட்டத்தரணி திரு. கே. என். சோக்சி

வியாபார நோக்கம்

முதலீட்டு வைப்பு, காணி கொள்வனவு, விற்பனவு, கைத்தொழில், இரத்தினக்கற்கள், சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு நிதி அளித்தல்

தொழிலாளர்களுக்கு பங்குகள்வழங்கிய இலங்கையின் முதலாவது பினன்ஸ் கம்பனி இதுதான்

| வருடம் | வழங்கப்பட்ட பங்கேட்டு முதல் | வருமான சேமிப்பு | முதலீட்டு சேமிப்பு | மற்றைய பற்று விபரம் | வரிவிதிப்புக்கு முன்னர் உள்ள முதலீட்டுவைப்பு | வரி விதிப்புக்கு பின்னர் உள்ள நிகர லாபம் | பங்கு லாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | 1,200,000 | 1,038,278 | 2,195,700 | 771,277 | 92,070 | 82,070 | 5 |
| 1974 | 1,200,000 | 1,065,951 | 6,045,843 | 2,681,195 | 264,328 | 147,826 | 10 |
| 1975/76 | 1,200,000 | 1,315,706 | 15,400,048 | 9,106,588 | 361,480 | 361,480 | 7·5 |
| 1976/77 | 1,200,000 | 664,721 | 31,894,498 | 4,276,988 | 395,762 | 395,762 | 10 |
| 1977/78 | 1,200,000 | 1,698,335 | 41,203,537 | 3,974,723 | 167,532 | 167,532 | 10 |
| 1978/79 | 1,210,150 | 1,727,524 | 57,284,462 | 1,866,699 | 145,561 | 145,561 | 10 |

வட்டி வீதம்

தவணை வைப்புக்கணக்கு

| முதலீடு செய்யவேண்டிய தொகை | முதலீட்டுக் கால எல்லை | செலுத்தப்படும் வட்டி வீதம் | செலுத்தப்படும் வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 12 மாதங்கள் | 20 % வருடம் | மாதம்/காலாண்டு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 22 % வருடம் | அரைவருடம்/ |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 24 % வருடம் | வருடந்தோறும் |

புதிய அதிவிரைவான பயனளிக்கும் வைப்புக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 18 மாதங்கள் | 22 % வருடம் | உங்கள் முதலீடு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 25 % வருடம் | முதிர்ச்சிஅடைந்ததும் |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 27 % வருடம் | முதலீடும் வட்டியும் செலுத்தப்படும் |

முதலீட்டுச் சேமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆகக் குறைந்த முதலீடு ரூபா. 50/- | 24 மாதங்கள் | 18 % வருடம் |

இந்த இலாபப்பங்குகள் ஊழியர்களுக்கு இலாப ஊக்குவிப்புப்பணம் வழங்கியபின் உள்ள தொகையாகும்.

31-3-81வரை ரூபா 10 கோடிக்கு மேல் நிலையான வைப்புத்தொகை

த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்
முன்றும் மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு-1
கிளை: 249/C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7680
மற்றும் 14 கிளைகள் நாடு பூராவும்.

தேசிய கலைஇலக்கிய பேரவை நடத்தும்

# பாரதி நூற்றுண்டின் ஆரம்பவிழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவை பாரதி நூற்றுண்டின் ஆரம்ப விழாவை 30ம் திகதி சனிக்கிழமை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

திரு. அ. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ் ஆரம்ப விழாவில் பேராசிரியர் க. கைலாசபதி ''பாரதியும் மறு மலர்ச்சிக் கோட்பாடும்—ஒருமதிப்பீடு'' என்ற தலைப்பில் பாரதியார் பற்றிய ஓர் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளார். மேலும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். ஏ. நுஃமான் தயாரித்து அளிக்கும் கவிதா நிகழ்வு நிகழ்ச்சியும் இடம்பெறும்.

பாரதி நூற்றுண்டு காலத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவைபல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது. தொடர் ஆய்வரங்கு, கட்டுரை பேச்சுப் போட்டிகள்—நாடகங்கள் என்பன இவற்றுள் அடங்கும். வருட முடிவில் பெருவிழா நடத்துவதுடன் ''பாரதி ஆய்வுகள்'' என்ற ஆய்வுக் கட்டுரைகள் கொண்ட நூல் தொகுதியும் வெளியிடப்படும்.

ஒவ்வொருமாதத்தின்கடைசி வாரத்திலும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தொடர ஆய்வரங்கு நடாத்தப்படும். பதினொரு ஆய்வரங்குத் தலைப்புக்களும் அவற்றைச் சமர்ப்பிப்போரின் விபரமும் பின்வருமாறு:—

''பாரதியும் மறுமலர்ச்சிக் கோட்பாடும்ஒரு மறுமதிப்பீடு' பேராசிரியர் க. கைலாசபதி, ''கால மாற்றங்களும் பாரதியும்'' இ. முருகையன், ''தேசிய இயக்க நெறிகளும் பாரதியும்'' கே. செந்திவேல், ''பொருளியற் சிந்தனைகளும் பாரதியும்'' அ. ஜெயரத்தினம், ''வர்க்கங்களும் பாரதியும்'' மா. சின்னத்தம்பி, ''பெண் விடுதலையும் பாரதியும்'' சித்திரலேகா மௌனகுரு, ''அரசியல் இலக்கியமும் பாரதியும்'' ந. இரவீந்திரன், ''கலைகளும் பாரதியும்'' சி. மௌனகுரு, ''கல்வியற் சிந்தனைகளும் பாரதியும்'' சி. மௌனகுரு, ''நவீனத்துவமும் பாரதியும்'' எம். ஏ. நுஃமான், ''இலங்கை கண்ட பாரதி', சி. தில்லைநாதன்.

கிளிநொச்சி ஆசிரிய இடமாற்றம்

# கல்விப் பணிப்பாளருக்கு ஆசிரியசங்கக்கிளை நன்றி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சித் தொகுதிப் பாடசாலைகளுக்கு யாழ். குடாநாட்டு ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்தமைக்காக இலங்கை தமிழர் ஆசிரியர்சங்க கிளிநொச்சிக்கிளை, வடமாநிலக் கல்விப்பணிப்பாளருக்கு நன்றி தெரிவித்துள்ளது.

கிளிநொச்சிக்கிளைச் செயலாளர் திரு. வே. பாலசுந்தரம், வடமாநிலக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

கிளிநொச்சித் தொகுதிப் பாடசாலைகளில் மிக நீண்டகாலமாக நிலவிவந்த ஆசிரிய பற்றுக்குறையை நீக்குவதற்கு தாங்கள் கல்விப்பணிப்பாளராக வந்தபின் பல தடவைகள் முயற்சி எடுத்துள்ளீர்கள் அதன் தொடர்ச்சியாக 1982ம் ஆண்டு மாவட்ட இடமாற்றத்தில் நூற்றுககு அதிகமாக யாழ்ப்பாணக் குடாநாட்டு ஆசிரியர்களை கிளிநோச்சித் தொகுதிப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்து இப்பகுதி விவசாயிகளின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிபெற நடவடிக்கை எடுத்தமைக்கு எமது கிளிநொச்சிக்கிளைச் சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மேற்படி இடமாற்றம்தடையின்றி நடைபெற வேண்டு என்பதையும் தெளிவுபடுத்துகிறேம். கிளிநொச்சித் தொகுதியிலிருந்து இவ்வருடம் ஆசிர்ய பயிற்சிக் கலாசாலைக்குச் சென்ற ஆசிரியர் தொகையினுலும் கிளிநொச்சித் தொகுதியிலிருந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றுபயிற்சி முடித்து வெளியேறிய ஆசிரியர்கள் வெளிமாவட்டங்க அனுப்பப்பட்டதாலும் இன்னும் கிளிநொச்சித் தொகுதியின் ஆசிரிய பற்றுக் குறையைக் குறைப்பதில்உதவிவந்த (க' பொ. த) தராதாமுள்ளோர் அனேகர் ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்க்கும் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டதால் மேற் கொண்டும் தமது சேவையை தொடராது விடும் நிலை ஏற்பட்டிருப்பதாலும் இந்த ஆண்டு மிகத் தொகையான ஆசிரிய பற்றுக்குறையைக் கிளிநொச்சித் தொகுதி எதிர்நோக்க உள்ளது.

இவற்றிற்கு ஓர் அளவாவது உதவக்கூடிய இந்த இடமாற்றங்கள் நடப்பதற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களும், தொழிற்சங்கப் பிரமுகர்களும் அரசியற் கட்சிகளின் அமைப்பாளர்களும்தடையாக இருக்காது யாழ்ப்பாணக்குடாநாட்டின் குடியேற்றப் பிரதேசமாகிய கிளிநொச்சித் தொகுதியின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவும்படி வேண்டுகோள் விடுக்கிறது.

# தற்கொலை

(மாவிட்டபுரம்)

மாமனுரின் கடையில் கையாடல் செய்தவர் தமது கையாடல் வெளிப்பட்டதையடுத்து நஞ்சிடம் தஞ்சமடைந்தார்.

புங்குடுதீவைச் சேர்ந்த மகேந்திரன் விக்னேஸ்வரன் (17 வயது என்பவரே இவ்வாறு நடந்துகொண்டவராவார்.


சுன்னுகத்திலிருக்கும் தமது மாமனுரின் கடையில் வேலை செய்த இவ்வாலிபர் கடையில் கையாடல்செய்து சீட்டு ஒன்றைக் கட்டி வந்ததாகவும் இது மாமனுருக்குத் தெரியவரவே அவர் கண்டித்ததாகவும், அதனுல் மனமுடைந்த இவர் நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தி தற்கொலை என தீர்ப்பளித்தார்.

# வை. எம். ஸி. எ உள்ளக சுற்றுப்போட்டி

(அரியாலை)

யாழ்ப்பாண வை. எம். சி. எ. ஸ்தாபனத்தின் வருடாந்த உள்ளகச் சுற்றுப் போட்டி அடுத்தமாதம் 1ம் திகதி தொடக்சம் பெப்ரவரி 20ந் திகதிவரை நடைபெறவிருக்கிறது.

வருடாந்த உள்ளகச் சுற்றுப் போட்டியில் டேபிள் டெனிஸ், பட்டமின்டன், கரம், செஸ், டெனிக்கொய்ட் இன்னும் பல விளையாட்டுகள் இடம்பெறவிருக்கின்றன. (அ



சென்னை றேட்டரிக்கழகம் கிளிநொச்சி றேட்டரிக் கழகத்துக்கு வழங்கிய மூன்று முச்சக்கர வண்டிகளில் ஒன்றை கிளிநொச்சி குருகுலத்துக்கு யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா வழங்குவதையும் அருகில் கிளிநொச்சி—பரந்தன் றேட்டரிக்கழகத் தலைவர் திரு. வி. ரி. சிவலிங்கம் நிற்பதை முதல்படத்திலும் கையளிப்பு வைபவத்தையிட்டு நடந்த பொதுக்கூட்டத்தில் அரச அதிபர் உரைநிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

கிரிக்கட்

# பல்கலைக்கழகத்தை யாழ். மத்தியகல்லூரி வென்றது

(அரியாலை)

யாழ். மத்திய கல்லூரி முதலாம் பிரிவுக் கிரிக்கட் கோஷ்டிக்கும், யாழ் பல்கலைக்கழகக் கோஷ்டிக்குமிடையே யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரிக் கோஷ்டி இனிங்சாலும், 55 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரிக் கோஷ்டி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டியில் விளையாடிய செல்வர்கள் தோமஸ், சவுந்தரராசா, மகிந்தா ஆகியோர் முறையெ: 97, 46, 33 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய யாழ். பல்கலைக்கழகக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் சுதர்சன் 66 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் செல்வன் கிரிதரகுகன் 67 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், செல்வன் சூரியகுமார் 67 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்,

யாழ். பல்கலைக் கழகக் கோஷ்டி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 48 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களையும் பெற்றது. இக்கோஷ்டியில் விளையாடிய செல்வர்கள்: பி, ஏ. ரவிராஜ், சூரியகுமார் ஆகியோர் முறையே 58, 24 ஓட்டங்களை இரண்டாம் ஆட்டத்தில் பெற்றனர்.

இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய யாழ் மத்திய கல்லூரிக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் ஜே. தோமஸ் 7 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், செல்வன் வி. சுதர்சனன் 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளையும், செல்வன் கே. உமாசுதன் 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் முதலாவது ஆட்டத்தில் பெற்றனர். இரண்டாவது ஆட்டத்தில் செல்வன். கே. தோமஸ் 59 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுகளையும், செல்வன் விஜயகுமார் 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

## வெற்றி தோல்வி இல்லை

யாழ் பல்கலைக்கழகக் கிரிக்கட் கோஷ்டிக்கும், யாழ் பரி. யோவன் கல்லூரிக் கோஷ்டிக்குமிடையே, யாழ், பரி. யோவான் கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழகக் கோஷ்டி 9 விக்கட்டுகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டியில் விளையாடிய செல்வர்கள் ரகுராஜ், கிரிதரகுகன் ஆகியோர் முறையே 24. 23 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்து பந்து வீசிய பரி யோவான் கல்லூரிக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் மகிந்தா 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், செல்வன் மோகனராஜ் 11 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கட்டுகளையும், செல்வன் உதயகுமார் 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி துடுப்பெடுத்தாடிய பொழுது எல்லா விக்கட்டுகளையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியில் விளையாடிய செல்வன்கள் பிரபாகரன், விக்னபாலன், மகிந்தா ஆகியோர் முறையே 57. 45, 29 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய பல்கலைக்கழகக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் ஈஸ்வரதாஸ் 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், செல்வன் கிரிதரகுமார் 29 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும், செல்வன் சூரியகுமார் 31 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும், செல்வன் ஜே. ஜீவானந்தம் 18 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கட்டையும் பெற்றனர்.

(அ)

## சமய தீட்கைஷ

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளி சைவமஹாசபை ஏற்பாடு செய்திருக்கும் சமயதீட்கைஷ வழங்கும் வைபவம், அடுத்தமாதம் 7 ம் திகதி ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (கெ)

YANMAR

யன்மார் டீசல் எஞ்சின்கள்

★ உறுதியானவை. நம்பகமானவை. உலகப் புகழ் பெற்றவை.

★ நீரிறைக்கும் பம்புகள், தெளிகருவிகள், ஜெனரேட்டர்கள், அரிசி ஆலைக் கருவிகள், ட்ராக்டர்கள், மற்றும் சகல விவசாய இயந்திரங்களுக்கும் ஏற்றவை.

★ திறமை மிக்க விற்பனைப்-பின்-சேவை, மற்றும் தாராள மாற்றுறுப்புகளின் பின்-பலம் கொண்டவை.

விலை: ரூ. 13,500/– முதல்.

6, 9, 15 குதிரைச் சக்தி ரகங்களுக்கு மேல் கிடைக்கும்.



கையிருப்பிலிருந்து கிடைக்கும்.

Mel Ads

ஜினசேன லிமிட்டெட்,

4, உஜுப்பிட்டியா வீதி, கொழும்பு 2.

தொலைபேசி: 26558/9

8 வது மகத்தான வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.30
பட்டாக்கத்தி
பைரவன்

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்னும் சிலதினங்கள் மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி10—30,2—30,6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ராஜா (யாழ். நகர்)
சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

WINDSOR
(JAFFNA)
Today Only
Daily 5 Shows
Henry Fonda in
INSIDE JOB Color
Thrilling Bank Robbery that ends in a failure.
From 30-1-82 Grand Gala Release
The Van Guard of a new Age of Transportation;
(Airport '80) (The Concorde)
Staring : Alain Delon. Gerge Kennedy
Susan Blakely.

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
133வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
குரு
பரபரப்பூட்டி காட்சியளிக்கும் கடைசி வாரம்!

ஸ்ரீதர் யாழ். நகர்
3—2—82 வரை
தினசரி: 10:30, 2:30, 6:15, 9:30
கமலஹாசன் - ஸ்ரீபிரியா
சட்டம் என் கையில்
(புதிய பிரதி)
4—2—82 முதல்
பட்டிக்காடா பட்டணமா

Regal Cinema
(Jaffna) Tele. 360.
தினசரி 10—30,3—00,
6—30, 9—30
FAME
Winner of two Academy awards (Aduts only)
30 — 31
COCK FIGHTER
(Color)
12 - 2 - 82
முதல்
தனிமரம்

# இன்றைய பலன்

தை மாதம் 16 ம் திகதி
வெள்ளிக்கிழமை
(29—1—82)

மேடம்: இன்று அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும், தொழில் புரியும் இடத்தில் பாராட்டப்படுவார்கள், உற்சாகமூட்டும் கடிதம் ஒன்று கிடைக்கலாம், சிறப்பான தினம்.

இடபம்: தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் தோன்றக்கூடும் இதன்மூலம் பொருள் விரயத்துக்கும் இடமுண்டு, மேலதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாவீர்கள், அடக்கம் வேண்டும்.

மிதுனம்: பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள், கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றமுண்டு, சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கலாம்.

கடகம்: உல்லாசமா பொழுதைப் போக்குவீர்கள், இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள், பிள்ளைகளின் நடவடிக்கை பெருமையைத் தேடித்தரலாம், பொருள் வரவுக்கும் இடமுண்டு.

சிங்கம்: எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தைத் தரலாம், எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும், பழைய நினைவுகள் துன்பத்தைத்தரும், தனிவழிப் பயணத்தைத் தவிர்த்தல் நன்று.

கன்னி: குடும்ப வழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும், நீண்ட நாள் பூமிப்பிணக்குச் சமரசமாக முடிவடையும், காதல் விவகாரங்களுக்கு இடமுண்டு, சிறப்பான தினம்.

துலாம்: ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறுவிதமாக அமையக் கூடும், வந்து சேரவேண்டிய பணத்தில் மீண்டும் தடையேற்படலாம், திரைமறைவில் சில சூழ்ச்சிகள் தோன்றக்கூடும்.

விருச்சிகம்: பிதாவழிமூலம் பெருமை தரும் சம்பவங்கள் இடம் பெறும், பெரியோர்கள் சகவாசத்தால் மதிப்பு உயரும், செயலாற்றுவதற்கான உற்சாகம் பிறக்கும், சிலர் வாழ்க்கையில் பொருள் வரவுக்கும் இடமுண்டு.

தனு: எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள், மனதில் புதிய எண்ணங்கள் வட்டமிடும், வியாபாரிகளுக்கு அதிக ஆதாயம் கிடைக்கும், உல்லாசப் பயணமொன்று மேற்கொள்ளப்படலாம்.

மகரம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம் புதிய நண்பர்களையும் கொண்டுவரும், மக்கள் பணியையே மகேசன் புணியாகக் கருதுவீர்கள், அறவழி மூலம் மற்றவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள், பூமிப் பிணக்கும் இன்று நிவர்த்தியாகும்.

கும்பம்: எண்ணத்தின் தாழ்குதல்கள் நெஞ்சத்தைப் புண்ணாக்கும், அற்பவிடயத்துக்குக் கூட பொல்லாங்கு கேட்க நேரிடும், தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள், சீறிவரும் கோபத்தை அடக்கவும்.

மீனம்: இன்னலின் பின்னலால் இதயம் வேதனைப்படும், வீட்டில் வைத்திய செலவுகள் அதிகரிக்கலாம், நண்பர்களுக்கு மத்தியில் அபிப்பிராய பேதங்கள் தோன்றக் கூடும், உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

ஊர்காவற்றுறை

# நீதிமன்றத் தீர்ப்புப்படி ஒருவேளைக்குழு தெரிவு

(நயினாதீவு)

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நம்பிக்கைச் சொத்து வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் நயினாதீவு செம்மணத்தம்பும் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஒரு வேளைக்குழு கூட்டம் நடைபெற்றது.

தீர்ப்பின் பிரகாரம் கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் நடாத்துவதற்காக இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. த. கிருஷ்ணசாமி செயலாளர்: திரு. மா. வேதநாதன் பொருளாளர்: திரு. இ. கனகசபை.

மேலும் இக்குழுவானது நீதிமன்றத்தின் தீர்ப்பை அனுசரிக்க வேண்டியிருந்தால் இக் குழு உறுப்பினர்களுடன் மற்றும் பொது மக்களையும் சேர்த்து கொழும்பு, யாழ்ப்பாணம், வவனியா. கிளிநொச்சி, நயினாதீவு ஆகிய இடங்களில் நிதிவசூல் செய்வதற்கும் நிதிக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்யப்பட்டனர். (க)

நயினாதீவு

# வழிபடுவோர் சபையின் முயற்சிக்குப் பாராட்டு

(நயினாதீவு)

நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பாலஸ்தாபனம் நீதிமன்றத் தடை உத்தரவை மீறிச் செய்யப்பட்டது. தொடர்பாகக் கடந்த 10 மாதங்களாக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கானது மேற்படி ஆலய வழிபடுவோர் சபையின் முயற்சியினால் முடிவுக்கு வந்துள்ளது. இச்சபை வழக்காளிகளையும் எதிராளிகளையும் சமரசப்படுத்தியதுடன் நீதிமன்ற வழக்கையும் வாபஸ்பெறச்செய்து ஒரு வேளைக்கேற்ற குழுவை கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் ஆகிய திருப்பணிகளைச் செய்து முடிக்குமென நீதிமன்றத்தின் அனுமதியையும் பெற்றுக்கொடுத்துள்ளது.

மேற்படி ஆலயத்தின் நிருவகித்துச் செய்வதில் ஏற்பட்டிருந்த தடங்களை வழிபடுவோர் சபை சுமுகமாக தீர்த்து வைத்தமையையிட்டுப் பலரும் பாராட்டிக் கொள்கிறார்கள்.

# உப்பு ஏற்றுமதி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உப்பு சரித்திரத்தில் முதல் தடவையாக இவ்வாறு பெருந்தொகையான ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களாக உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றபோதிலும் ஒரே கப்பலில் இவ்வாறான தொன் உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் ஏற்றுமதி செய்யப்பட்ட உப்பு ஆபிரிக்க் நாட்டுத் துறைமுகங்களில் ஒன்றான தருசலத்தில் இறக்குமதி செய்யப்பட்டு தான்ஸானியா நாட்டிற்கு வியாபாரத்திற்கு கொண்டுசெல்லப்படும். இந்தக் கப்பலில் ஏற்றுமதி செய்யப்பட்ட உப்பு தரத்தில்கூடியவை என்றும் புத்தம் புதிய பைகளில் அடைக்கப்பட்டவை என்றும் ஏற்றுமதி வேலைகள் மிகவும் சுறுசுறுப்பாகவும் திருப்திகரமாகவும் செய்யப்பட்டதாக கூட்டுத்தாபன அதிகாரிஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

உப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து உப்பைக் கொள்வனவு செய்த கப்பல் ஏஜென்ஸி நிறுவனமான க. ஜெயபாலசிங்கம் ஸ்தாபனத்தினர், உப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து மேலும் பத்தாயிரம் தொன் உப்பை கொள்வனவு செய்துள்ளனர். இதில் ஆயிரம் தொன் உப்பு நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் துறைமுகம் வந்துசேரும் எம். வி. "ஜெட்பூர் சாகரா," என்ற கப்பல் மூலம் பங்களாதேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும். இவ்வருடத்தில் சுமார் ஐம்பதினாயிரம் தொன்னுக்கு மேல் உப்பு வங்களாதேசம், ஆபிரிக்க நாடுகளுக்கு காங்கேசன்துறை துறைமுகம் மூலம் ஏற்றுமதி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக உப்புக்கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்தனர்.

பரந்தன் வேலைநிறுத்த

# ஆதரவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவான பொதுக்கூட்டங்கள் இன்று மாலை பரந்தன் சந்தி மைதானத்திலும் நாளை மாலை சாவகச்சேரி மைதானத்திலும் நடைபெறுகிறது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. பாலாதம்பு, திருவாளர்கள் பேர்ஸி விக்கிரமசேகரா, டி. ஏ. புஞ்சிஹெட்டி, கே. எஸ். வேலாயுதம் ஆகியோர் இக்கூட்டத்தில் உரையாற்றுகின்றனர்.

திரு. பாலா தம்பு நாளைக் காலை யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தொழிற் சங்க காரியாலயத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றையும் நடத்துகிறார். (இ)

சைவமஹாசபை

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச்சைவமஹாசபையின் பொதுக்கூட்டம் இம்மாதம் 31ம் திகதி மாலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. நம. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் ஆசியுரை வழங்கவுள்ளார்கள். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரை ஆற்றுவார்கள். நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறும். (இ)

# கற்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான கற்பூரத் திருவிழா நாளை 30ம் திகதி நடைபெறவிருக்கிறது. பகல் சங்காபிஷேகமும் நடைபெறவிருக்கிறது.

# வரி விளம்பரம்

## தேவை

புதியது அல்லது நல்ல நிலையிலுள்ள பழைய மிருதங்கம் உடன் தேவை, விபரங்களுக்கு: இ. க, தி. இறைவன். 120, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2106

யாழ். நகரில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு கீழே குறிக்கப்படும் தகமைகளையுடைய ஒருவர் உடனடியாகத் தேவை. வர்த்தகவியல், கணக்கியலில் திறமைச் சித்தி, வர்த்தக நிறுவனக் கணக்குகள் ஆங்கிலத்தில் எழுதக்கூடிய தகுதி. ஐந்தொகை கணிக்கும் அறிவு. கணக்குப் பரிசோதனை நிறுவனங்களில் வேலைசெய்த அனுபவம். விண்ணப்பதாரர் தாம் கோரும் சம்பள விபரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் மாசி மாதம் 5ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2105, மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். 2105

நல்லூரில் இருக்கும் எமது வாசனைத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. வேலை செய்ய ஆர்வமுள்ள, தேக ஆரோக்கியமுள்ள, நல்லொழுக்கமுள்ள பெண்பிள்ளைகள் மட்டும் நேரில் வரவும். நல்லூருக்குச் சமீபமாக வசிப்பவர்கள் விரும்பப்படுவர். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 191, (53), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2096

எமது கல்லூரி விவசாயப் பண்ணைக்கு விவசாயத்தில் செய்முறை அனுபவமுள்ள ஊழியர் தேவைப்படுகின்றனர். தகுதியுள்ளவர்கள் சான்றிதழ்களுடன் 3—2—82 மாலை 3 மணிகு எமது காரியாலயத்துக்கு நேரில் வரவும். அதிபர், பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம், 2111

## வாடகைக்கு

நவீன வசதிகளுடன் பிரத்தியேகமான வீடு (Annex) யாழ். நகரில் பிரதான பாடசாலைகள், ஆஸ்பத்திரி, கச்சேரி, பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் மாசி மீ தொடங்கி எடுக்கலாம். கடிதம் மூலம் தொடர்புகொள்க. விளம்பர இல. 2117, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2117

## விற்பனைக்கு

நாச்சிமார் கோவிலடி சாந்தி அச்சக முன் ஒழுங்கையில் வீட்டுடன் 3 1/2 பரப்பு காணி மின்சார, தண்ணீர் வசதியுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; எம். எஸ். சுந்தரம், தாவடிச்சந்தி 2102

தனிப் பாவனையில் இருக்கும் 403 பேஜோ 4 சிறி கார் விற்பனைக்குண்டு. வொக்ஸ்வேகன் கார் மாற்றவும் விருப்பமுண்டு. தொடர்பு: 24, 2ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். தொலைபேசி: 8031 (2103)

நாவற்குளிச் சந்தியிலிருந்து 300 யார் தூரத்தில் கேரதீவு றோட்டில் பத்துப் பரப்பு தென்னை மரங்களுடன் வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு. மின்சார இணைப்பும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: மு. சபாபதிப்பிள்ளை, 165/1, கோவில் வீதி நல்லூர். 2112

4 1/2 பரப்பு காணி விபுலானந்த வீதியில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டியவர்: நல்லைநாதன், 36, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், 2113

அபிவிருத்திச்சபை
யாழ்ப்பாணம்

### இலங்கைவங்கியின் உதவியுடன் ஸ்தாபிக்கவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ். மாவட்டத்தில் இலங்கை வங்கியின் உதவியுடன் 10 லட்சம் ரூபாவிற்கும் 50 இலட்சம் ரூபாவிற்கும் இடையிலான முதலீட்டு அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தாபிக்கப்படவிருக்கின்றன. இது பற்றிய திட்டக் கோரிக்கைகளை அனுப்ப விரும்புவோர் அபிவிருத்தித் திட்டக் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலதிக விபரங்களுக்கு திட்டமிடல் பகுதியுடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
அபிவிருத்திச் சபை,
யாழ்ப்பாணம்,
2115

# திருமண அழைப்பு

தை மாதம் 18ம் நாள் (31-1-82) ஞாயிற்றுக்கிழமை காலை 6-36 முதல் 7 24 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| எமது புத்திரன் செல்வன் சுவாமிநாதருக்கும் | திரு. க. சிவபாதசுந்தரம் புத்திரி செல்வி சாரதாதேவிக்கும் |
|---|---|

சுன்னகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலில் நடைபெறும் திருமணத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சு. பொன்னம்பலமும்
பாரியாரும்

''சோதி இல்லம்''
சுன்னகம்

தனிப்பட்ட அழைப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளது
2065

# எரிபொருள்...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

இவையாவும் மேற்குலக ஏகபோகங்களது ஆதிக்கத்தை தடுமாறச் செய்துவிட்டன. எண்ணெய் உற்பத்தி நாடுகள் தமது மூலவளங்களைப் பாதுகாக்கவும் தமது எண்ணெய்க்கு நியாயமான விலைகிடைக்கவும் எடுத்த நடவடிக்கைகள் சரியானவை தாம். உலக எரிபொருள் நெருக்கடிக்கு இதுதான் காரணமல்ல. மாறாக இந்த நடவடிக்கைகளை விரும்பாத, இந்த நடவடிக்கைளினால் பெரிதும் பாதிப்படைந்த இச சர்வதேச பெரு நிறுவனங்கள், தமது நிகர லாபத்தை அதிகரிக்கும் வண்ணம் எண்ணெய் விலையை உயர்த்தின. இந்த விலை உயர்வினால் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கான காரணத்தை எண்ணெய் உற்பத்தி நாடுகள்மீது போடப்பட்டன. மேற்குலகின் வெகுஜனங்கள் இந்த நெருக்கடிகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எண்ணெய் உற்பத்தி நாடுகளைப்பொது எதிரியாகக் காட்டுவதற்கு தகவல் சாதனங்கள் நன்கு பயன்படுத்தப்பட்டன.

1979ல் அடுத்த நெருக்கடி ஏற்பட்டது, இது செயற்கையாக உருவாக்கப்பட்டதாகும். அப்போது ஈரான் எண்ணெய விநியோகத்தைக் குறைத்திருந்தது. ஆனல் சவுதி அரேபியாவும் ஈராக்கும் இக்குறைவை ஈடுகட்டும்வகையில் எண்ணெய் உற்பத்தியை அதிகரித்திருந்தன. ஆனல் சர்வதேசப் பெருநிறுவனங்கள் மேற்குலகின் தகவல் சாதனங்களது துணையுடன் செயற்கையான நெருக்கடியை உருவாக்கின. ஈரான் மீது பழி போட்டுவிட்டு எண்ணெய் விலையை இரண்டு மடங்காக உயர்த்தின, 1979ல் மட்டும் 1000 கோடி டாலர்களை அமெரிக்க நிறுவனங்கள் நிகர லாபமாகப் பெற்றன.

வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை, எண்ணெய் விலையேற்றம் அவற்றின் பொருளாதாரத்தைப் பாதித்துள்ளது. அவற்றின் வெளிநாட்டுக் கடன் 360,000 கோடி டாலர்களால் அதிகரித்துள்ளது. அவை மென்மேலும் மேற்குலக நாடுகள்மீது தங்கியிருக்கும் நிலையும் அதிகரித்துள்ளது. ஆனல் ஒபெக் நாடுகள் உதவியளிக்கவில்லையாயின் இந்த நெருக்கடிகள் மேலும் மோசமாகியிருக்கும். 1974—1978 காலப்பகுதியில் 2900 கோடி டாலர்களை எண்ணெய் உற்பத்தி நாடுகளிடமிருந்து உதவியாக இவை பெற்றுள்ளன. எண்ணெய்க் கம்பனிகளால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நெருக்கடிகளையும் கடன்களையும் இந்த உதவி ஈடு செய்யாது.

மேற்கு நாடுகள், ஒபெக் நாடுகள்மீது எண்ணெய் விநியோகத்திற்காகத் தங்கியிருக்கும் நிலையைக் குறைக்க விசேஷ சுயதேவைப் பூர்த்தி திட்டங்களை வகுத்து செயல்படுத்திய போதும் அவை தோல்வியடைந்துவிட்டன. மேற்குலகின் சந்தைப் பொருளாதார அமைப்பு நிரந்தரமான நெருக்கடிகளின் தோற்றுவாயாக இருப்பதனால், இப்பிரச்னைக்கு அவற்றினல் தீர்வு காண முடியாது.

# மாணவர்கள் அவதி

[துணுக்காய்]

முல்லைத்தீவு மல்லாவி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து இவ்வருடம் 7 ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும் வேறு பாடசாலைகளுக்கும் மாற்றலாகிச் சென்றுவிட்டனர். இதற்குப் பதிலாக நாலுபேர் மட்டுமே இடமாற்றம்பெற்று வந்துள்ளனர். அத்துடன் பாடங்களுக்கு ஏற்ற ஆசிரியர்களும் வரவில்லை. இதனல் மாணவர்களும் பெற்றோரும் பெரும் கவலை கொண்டுள்ளனர். [இ]

எரிந்த யாழ். நூலகத்துக்கு

# சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்பகம் அன்பளிப்பு

சென்னை ஜன 28.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் எரிந்து நாசமாக்கம்பட்ட பொது நூலகத்துக்கு தமிழ்நாடு சைவ சித்தாந்தக் நூற்பதிப்புக்கழகமும் வெளியிட்டுள்ள நூல்கள் அன்பளிப்பாகக்கிடைக்கவிருக்கின்றன.

தமிழ்நாடு அரசதிட்ட ஆணைக்குழுவின் உதவித்தலைவர் திரு. எம். முத்துசாமி மேற்படி நூல்களை வழங்கியுள்ளனர்,

அண்மையில் மேற்படி கழகத்தின் வைரவிழா நடைபெற்ற பொழுது அவ்விழாவில் இந் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் பழங்கால தமிழ் நூல்களை வெளியிடுவதில் கழகம் ஆற்றி வரும் சேவையைப் பெரிதும் புகழ்ந்துரைத்தார்,

தமிழ்நாடு ஆளுநர் திரு. சாதிக் அலி இவ் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் பிரசுரகர்த்தாக்கள் புராதன பெருமைகளையும் கலாச்சாரங்களையும் இழந்துவிடாதமுறையில் புதிய சிந்தனைகள்—கலாசாரங்கள் அடங்கிய தரமான நூல்களை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தமிழ் கலாசாரத்தின் சிறப்பியல்புகளைக் குறிப்பிட்ட அவர் எதையும் சகித்துக்கொள்ளும் அதன் தன்மையைப் பாராட்டினார்.

செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் இவ் விழாவில் பேசுகையில் பாரதியார் காலமான கையோடு அவரது ஆக்கங்களை வெளியிடுவதற்காக இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது என்று குறிப்பிட்டார். இவ்விழாவுக்கு மேலவைத் தலைவர் திரு. எம். பி. சிவஞானக்கிராமணியார் தலைமை வகித்தார். கழகத்தின் வெளியீடுகளின் கண்காட்சி ஒன்றை திரு. எம். ஏ. முத்தையா செட்டியார் திறந்து வைத்தார்.

# பஸ்ஸில்கிடந்த தாலிக்கொடி காப்பாளர் தரும் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

பஸ்ஸில் கிடந்த தாலிக்கொடி என்ற தலைப்புடன் வியாழனன்று வெளியான செய்திபற்றி வடமாநில பஸ் போச்குவரத்துச் சேவையைச் சேர்ந்த காப்பாளர் எஸ். நல்லதம்பி விளக்கம் ஒன்றை தந்துள்ளார்.

அன்றையதினம் காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குச் சென்ற பஸ்ஸில் தாலிக்கொடியொன்று கிடந்தெடுக்கப்பட்டது உண்மைதான்.

தாலிக்கொடியை எடுத்தவுடன் அங்கு நின்ற பிரயாணிகளிடமும் பொதுமக்களிடமும் யாருடையது என்று விசாரித்தேன்—முன்னதாக இறங்கிச் சென்ற பெண்களுடையதாகவிருக்கும் என்று சிலர் கூறினர்கள். ஆனல் எவரிடமும் நான் அதைக் கொடுக்கவில்லை. காரணம் இ. போ. ச. ஒழுங்கின்படி பஸ்ஸில்கிடந்தெடுக்கும் பொருட்கள் டிப்போவில் ஒப்படைக்கப்படவேண்டும். அதற்காகவே வைத்திருந்தேன். அதற்குள் பொலிசாருக்குத்தகவல்கொடுக்கப்பட்டு அவர்கள் அழைத்துச் சென்றுர்கள் பொலிசில் அதனை ஒப்படைத்தேன். இதில் மோசடி செய்யும் நோக்கம் ஒன்றும் எனக்கிருக்கவில்லை.

இவ்வாறு காப்பாளர் நல்லதம்பி கூறியுள்ளார்.

## வினைதீர்க்கு

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

நமக்கு வரும் வறுமை நோய், துன்பம் முதலியன நாம் முற்பிறவிகளில் செய்து கொண்ட தீவினைகளால் வருவன, அவை உள்ளம் உருகி முருகன் திருநாமத்தை ஓதுதலால் நீங்கிவிடும்.

''முருகன் குமரன்
குகனென்று மொழிந்து
உருகுஞ் செயல்தந்
துணர்வென் றருள்வாய்''

என அருணகிரிநாதர் கேட்பது இங்கு நோக்கற்பாலது. நமது வாக்கிலே முருகன் திருநாமமும் உள்ளத்தில் அவரது உருவமும் பொருந்துமேயானல்நமக்குஓர் தீங்கும் ஏற்படாது, இறைவன் நாமத்தை நினைப்பவர் சொல்லுபவர்கள் ஆகியோர்உள்ளத்தில் தீங்கான எண்ணம் உண்டாது. தீமையான மொழிகள் வராது. எனவே தீமையான செயல்களையும்அவர்கள்செய்ய மாட்டார்கள். அவர்களுக்கு வாழ்க்கையில் நன்மையே ஏற்படும்.

முடியாப் பிறவிக் கடலிற்
புகார்முழு துங்கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப்
படார் வெற்றிவே
பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமா
னவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு
மாள்திரு நாமம் புகல்பவரே
—கந்தரலங்காரம்.

## பொலிசைக்கண்டதும் ஓட்டம்பிடித்தனர்

(மாவிட்டபுரம்)

சைக்கிளில் வந்த 5 இளைஞர்கள் பொலிசாரைக்கண்டதும் சைக்கிளையும் கையிலிருந்த சில கடத்தல்பொருட்களையும் போட்டுவிட்டு ஓடிவிட்டார்களாம்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் இச்சம்பவம் நடந்துள்ளது.

வல்வெட்டித்துறைப் பொலிசைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் திரு. சமரவீர தலைமையில் பொலிஸ்கோஷ்டியொன்று ரோந்துசுற்றிக் கொண்டு வந்ததாம். ஓர் இடத்தில் ஐந்து வாலிபர்கள் சைக்கிள்களில் வந்தனர். இவர்கள் பொலிசாரைக் கண்டதும் சைக்கிள்களையும் சில பெட்சீட்டுகளையும் அதேயிடத்தில் போட்டுவிட்டு ஓடிவிட்டார்களாம். சைக்கிளையும் பெட்சீட்டுகளையும் கைப்பற்றிய பொலிசார் புலன்விசாரணை நடத்திவருகின்றனர்.

# பொலிசாரே விசாரிப்பர்

[கொழும்பு]

பயங்கரவாதிகள் தொடர்பான சகல விசாரணைகளையும் இனிமேல் இரகசியப் பொலிசார் மட்டுமே நடத்துவார்கள்.

பொலிஸ மா அதிபர் திரு. அன செனிவரத்தின நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில். உடனடியாக பயங்கரவாதம் தொடர்பான சந்தேகநபர்களையும், விசாரணை விபரங்களையும் இரகசிய பொலிசாரிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்துள்ளார்.

### மினிபஸ் தாக்குதல் சம்பவம்

# 30,000 ரூபா சேதம்: சாரதிக்கு ரூ. 10,000 பிணை

(ஊர்காவற்றுறை)

பிரயாணிகளை ஏற்றுவதில் ஏற்பட்ட தகராறு காரணமாக இம்மாதம் 24ந் திகதி புங்குடுதீவைச் சேர்ந்த ஆறுமுகம் இராமலிங்கத்திற்குச் சொந்தமான மினி வானை, மற்றொரு மினி வான் சாரதி வழிமறித்து, வில்லுத்தகட்டினல் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இதுபற்றிப் பொலிஸில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சந்தேகநபரான சாரதி ஐயம்பிள்ளை சிவராமலிங்கத்தைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இச்சம்பவத்தினல் சுமார் 30 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு ரி. கே. என். திலகன் முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டார் பின்னர் எதிரியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளான என். ஸ்ரீகாந்தா, எஸ். கே. மகேந்திரன் ஆகியோர் எதிரியை பிணையில் விடுமாறு கோரியதை ஏற்றுக்கொண்ட நீதிபதி எதிரியை பத்தாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

முறைப்பாட்டுக்காரரின் சார்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் சார்ஜண்ட் திரு. நவரத்தினம் ஆஜரானர். மேல்விசாரணை அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

★முயல் ★வரிக்குதிரை ★ சந்திரிகா ★ தேனீ ★யானை★கொடி மார்க்
ஓடுகளும்
மற்றும் செங்கல் முதலியவற்றுக்கும் விஜயம்செய்யுங்கள்
ஏக விநியோகஸ்தர்கள்:—
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி - யாழ்ப்பாணம்
போன்: 7493

மிகவும் குறைந்த
விசேட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
தற்பொழுது
மக்கினென்ஸ் வழங்குகிறது
ஃ சிங்கப்பூர் செல்வோருக்கு
மிகவும் கூடிய கழிவுடன், மற்றும்
ஃ மத்தியகிழக்கு ஃ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும்
விரும்பிய விமானத்தில்!
விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்பிரதிநிதிகளான எம்மிடம்
வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில் (TRAVELLERS CHEQUES)
பிரயாணக் காசோலைகள்
நாடுங்கள்
மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154

## கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி பாரதிவிழ

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பாரதி நூற்றுண்டு விழாவை பெப்ரவரிமாதம் பத்தாம் திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை தற்போது மாணவ ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

முழுநாள் விழாவாக நடைபெறும் இவ்விழாவில் மாணவ ஆசிரியர்களின் கவியரங்கம், சொற்பொழிவு உட்பட பாரதிபாடலோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (உ)

## இன்று வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

இரணைதீவு தேவமாதா கோவிலில் பங்குத்தந்தையாக 37 வருடங்கள் கடமையாற்றிவிட்டு கடந்த 70ம் ஆண்டு தமது தாயகமான பிரான்ஸுக்குச்சென்ற வண ஹென்றி மோறோ இன்று இரணைதீவு குருதீபம் கிராமத்திற்கு வருகிருர். குருதீபம் மக்கள் இன்று மாலை அவருக்கு சிறந்த வரவேற்பளிக்கின்றனர். (இ)

## பரு.கிழக்கில்தொடர்ந்து ஆசிரியர் தட்டுப்பாடு

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்கிலுள்ள பாடசாலைகளில் தொடர்ந்தும் ஆசிரியத் தட்டுப்பாடு நிலவி வருகிறதாம். இதனல் இப்பகுதி மாணவர்கள் உரிய கல்வியினைப் பெற்றுக் கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளார்கள்.

இப்பகுதியில் ஏற்கனவே இருந்து வந்த ஆசிரியர் பற்றுக்குறை இம்முறை இப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவாகிச் சென்றதுடன் பெரும் இடைவெளியினை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. (அ)

## வடலியடைப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளரான பொன்னுத்துரை கனக குலசிங்கம்இராணுவத்தினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு, ஹெலிகொப்டர் மூலம் பலாலி இராணுவ முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்

தேநீர்க்கடையிலிருந்து கூட்டணித் துண்டுப்பிரசுரங்கள் சில கைப்பற்றப்பட்டன.

வடலியடைப்புக் கிராமத்தில் நேற்றுக் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பலத்த சோதனை நடைபெற்றது. பாதுகாப்புப் படையினரின் திடீர் முற்றுகையினல் பொதுமக்கள் மிகவும் பீதி அடைந்து காணப்பட்டனர்.

இச்சோதனையின்போது பிரிகேடியர் சிறில் ரணதுங்க, குருநகர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கேர்ணல் கொப்பேகடுவ ஆகியோர் ஸ்தலத்தில காணப்பட்டனர்.

## கொலம்பியா விமானம் கடத்தப்பட்டது

பொகோட்டா, ஜன. 28

ஏழு இடதுசாரி கொரில்லாக்களினல் கடத்திச் செல்லப்பட்ட கொலம்பியா விமானத்தைத்தாக்கி அதில் பணயம் வைத்துள்ளவர்களை மீட்பதற்கு கொலம்பிய துருப்புக்கள் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

விமானக் கடத்தல்காரர்களுக்கும் துருப்புக்களுக்கும் இடையே நீண்ட நேரமாக நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சண்டையின்போது விமானம் பலத்த சேதமடைந்தது என்றும் கடத்தல்காரர்கள் தன்னியக்க துப்பாக்கிகளுடன் கைக்குண்டுகளையும் வைத்திருக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

கொலம்பியாவின் காலி விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள இவ்விமானத்திலிருந்து 86 பயணிகளை கடத்தல்காரர்கள் விடுதலைசெய்தனர்.

## 3 இளைஞர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து பறித்துச்செல்லப்பட்டதெனச் சொல்லப்படுகிறது.

மடுவைச் சேர்ந்த சின்னத்தம்பி கணேசலிங்கம் அல்லது பாருக், அந்தோனிப்பிள்ளை உதயகுமார், சாவகச்சேரியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை ஜயமுகுந்தன் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களெனத் தெரியவருகிறது

### துப்பாக்கிகளுடன் இருந்தனராம்

விசாரணைக்குச் சென்ற பொலிஸார், இவர்கள் மூவரும் இருந்த வீட்டின் அறைக் கதவைத் தட்டியதாகவும், துப்பாக்கிகள் சகிதம் மூவரும் கதவைத் திறந்தபொழுது, பொலிஸார் இவர்களுடன் போராடி மடக்கிப் பிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரினல் கைதுசெய்யப்பட்ட மூவரும் மற்றும் பொருட்களும் விசாரணைக்காக இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து ஆயுதப் படையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மா)

## இராணுவ அதிகாரி மீட்பு

ரோம் ஜன. 28

செம்படைக் கெரில்லாக்களினல் கடத்திச் செல்லப்பட்ட அமெரிக்க இராணுவ அதிகாரி ஜேம்ஸ் டோஸியர் இத்தாலியில் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். (வெ)

மின்தறி நெசவாளர்
தேவை
எங்கள் மின்தறி நெசவாலைக்கு அனுபவமுள்ள நெசவாளர்கள் தேவை. பகுதிநேர வேலை (Shift) அடிப்படையில் பணிபுரியவேண்டும்.
மின்தறி நெசவு அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.
சக்தி றெக்ஸ்ரைல் மில்
(சீமா சில்க் இண்டஸ்ரீஸ் பின்புறம்)
பலாலி றோட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 2126

புதுக்கடை இன்று
திறப்பு விழா
நிகழும் துர்மதி ஆண்டு தை, 16ம் நாள் (29.1.82) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வரும் சுபவேளையில், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி 330ம் இலக்கத்தில் (நவீன சந்தை முன்பாக)
புரியாணி, நூடில்ஸ் (கோழி, ஆட்டிறைச்சி) சகலவிதமான உணவுவகைகள், தரத்தில் சிறந்த ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகளுக்கும்
யாழ். நகரில் புதிய ஸ்தாபனம்
'ஹோட்டல் றிவேக்கா'
HOTEL RIVECAH
என்னும் புதிய ஸ்தாபனத்தை ஆரம்பித்துவைக்கின்றோம்.
ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
2118

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 29-ம் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.